ஜநவிநோதிநி.

இல. 3.] மார்ச்சுமீ 1883. [புஸ்த. XIV.

ஸர் ஐஸக் நியூட்டனும் அவர் நூதனமாய்க் கண்டறிந்த விஷயங்களும்.

ஸர் ஐஸக் நியூட்டனெனப் பெயர்பெற்ற வானசாஸ்திர பண்டிதனைப்பற்றி நாம் சென்ற 1879-ஆு பெப்ருவரிமாதத்துச் சஞ்சிகையிலேயே சொல்லியிருக்கிறோமாயினும், இப்போது அவருடைய வடிவழகை விளக்குகின்ற சித்திரப்படம் கிடைத்திருப்பதால், அவ்விடத்தில் எடுத்துரையாத அவருடைய பின்னும் சில அற்புதமான சக்திகளையும், அவர் நூதனமாய்க் கண்டறிந்த விஷயங்களையும் இப்போது விளங்கச்சொல்லி, அந்தச் சித்திரப்படத்தை இச்சஞ்சிகையிற் சேர்த்திருக்கிறோம்.

ஐஸக் நியூட்டன் 1642-ஆு டிசம்பர்மீ 25உ இங்கிலாந்தில் லிங்கன்ஷயர் மாகாணத்தில் பிறந்தவர். சிறுபருவத்திலேயே தகப்பனார் இறந்துபோகவே அவரைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு அத்தனையும் தாயின் அதீனமாயிற்று. தாய் உபேக்ஷைசெய்யாமல் அவர்க்குச் செம்மையாகவே வித்தியாப்பியாசம் செய்வித்துவந்தாள். நாம் முன் சொல்லியபடியே அவர் பன்னிரண்டுவயதில் கிராந்தம் நகரத்துப் பாடசாலையில் படிக்கப்புகுந்து, அங்கிருந்த காலத்தில் படிப்பில் அத்தனையாக நோக்கமில்லாமல் பாடசாலையில் படிக்கவேண்டிய பாடங்களை உபேக்ஷைசெய்து, காற்றுயந்திரம், நீர்க்கடிகாயந்திரம் முதலிய யந்திரங்கள் செய்வதிலேயே மிகுந்த விருப்பமுடையவராகி முக்கியமாய் அவ்விஷயங்களிலேயே பொழுது போக்கிவந்தார். அதனால் பாடம் படிக்கின்ற வகுப்பில் மிகவும் பின்தங்கியிருக்கையில், ஒருநாள் அவரை முழுமூடனென்று வகுப்பில் அவர்க்குமேலிருந்த ஒரு பையன் உதைக்க, அன்றுதொட்டு அவர் அதிக ஆக்கிரகம்கொண்டு அந்தப் பையனை வெல்லும்பொருட்டுத் தான் வகுப்பில் முதற்பிள்ளையாகவேண்டுமென்று அதிக ஊக்கத்தோடு உழைத்துப் படித்தாரென்ற விஷயமும் முன்னமே எழுதியிருக்கிறோம். பிறகு 18-வது வயதில் அவர் கேம்பிரிட்ஜ்

நகரத்து வித்தியாசாலையிற்போய்ச் சேர்ந்து அந்த வித்தியாசாலையில் அப்போதுதான் கிரீக்பாஷைக்குப் பண்டிதராக நியமிக்கப்பட்ட டாக்டர் பாரோ என்ற வித்வானிடத்தில் படிக்கப்புகுந்தார். நியூட்டனுடைய வாழ்நாளுள் மற்றக்காலங்களெல்லாவற்றையும் பார்க்கிலும் மிகவும் மேன்மைபெற்றது இதற்குப்பிறகு சென்ற ஆறுவருஷகாலமேயாம். அதாவது அவர் கண்டறிந்த புதுமைகளெல்லாம் வெகுவாய் அந்த ஆறுவருஷகாலத்திலேயே. அவருடைய உபாத்தியாயர் அடிக்கடி உபந்நியாஸம் செய்வதுண்டு. அவர் உபந்நியாஸம் செய்யப்போகிற விஷயங்களையெல்லாம் நியூட்டன் முன்னமே நன்றாய்த் தெரிந்துகொண்டு போவாராதலால், அவ்விஷயங்களைப்பற்றி உபாத்தியாயருக்குத் தெரிந்திருப்பதைப்பார்க்கிலும் அவர்க்கு அதிகம் தெரிந்திருக்கும்.

யூக்லிட் என்பவர் செய்த க்ஷேத்திரகணிதத்தின் நுட்பங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டபிறகு, பின்னும் மற்றவர்கள் செய்த க்ஷேத்திரகணிதங்களையும் கற்கப்புகுந்து, கெப்லர்செய்த நேத்திரசாஸ்திரத்தையும் நியூட்டன் நன்றாய்க் கற்றுணர்ந்தார். அவர் படிக்கும் புத்தகங்கள்தோறும் விசேஷார்த்தங்களை ஓரங்களில் எழுதிக்கொள்வது வழக்கம். அவர் சிறுபருவத்திலேயே பீஜகணிதத்தில் பைநோமியல் தியரம் (Binomial Theorem) என்ற சூத்திரத்தைக் கண்டு பிடித்தார். வானத்திலுள்ள கிரகங்களுக்கெல்லாம் சூரியனே மையமாய் எல்லாவற்றையும் தன்னிடத்திற்கு இழுக்கிறதென்ற தத்துவத்தையும் நிரூபித்துக்காட்டினார். ஒருநாள் அவர் இந்த இரண்டாவது விஷயத்தின் உண்மையைப்பற்றி ஆலோசித்துக்கொண்டே தன் தோட்டத்தில் உட்காந்திருக்கையில், அவர் பக்கத்தில் மரத்திலிருந்து ஒரு பழம் கீழேவிழ்ந்ததாகவும், அதைப் பார்த்தவுடனே அவருடைய சிந்தனை அதில் திரும்பி, அப்போது தான் யோசித்துக்கொண்டிருந்த விஷயத்துக்கு அதை ஒரு ஆதாரமாகக்கொண்டதாகவும் சொல்லுகிறார்கள்.

தன்னுடைய 22-வது வயதான 1665-லூத்தில் நியூட்டன் கல்வியில் தேர்ந்து பி. ஏ. என்ற பட்டப்பெயர் பெற்றார். அந்தக் காலத்திலேதான் அவர் தூரதிருஷ்டிக்கண்ணாடிக்காக கண்ணாடிகளைச் சாணைபிடிக்கத்தொடங்கினார். நிறங்களின் தத்துவத்தைக் கண்டறியும்பொருட்டு அதற்கேற்ற பளிங்குக்கண்ணாடிகளையும் கண்டுபிடித்தார். அவைகளின் மூலமாய் ஒளி நிறம் இவைகளைப்பற்றிய அவருடைய கொள்கை நிலைநாட்டப்பட்டது. அதற்குப்பிறகு மையக்கவர்ச்சியைப்பற்றிய விதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் அந்த விஷயங்களை வெளிப்படையாய்ப் புத்தகத்தில் பிரசுரம்செய்ய 1687-லூவரையில் சென்றது. இவ்வளவு புதுமைகளைத் தாம் கண்டுபிடித்தும், அதைப்பற்றி ஒரு மேம்பாடான எண்ணம் அவர்க்கு ஒருபோதும் உண்டானதாகத் தோன்றவில்லை.

பின்னென்னவெனின், இந்தப் பிரபஞ்சமாகிய மகா சமுத்திரத்திலே தாம் கண்டது ஒரு திவலைகூடக் காணுதென்ற எண்ணமே எப்போதும் அவருடைய உள்ளத்திலிருந்தது. "உலகத்தார் என்னைப் பற்றி யாது நினைக்கிறார்களோ? நான் இப்போதும் ஒன்றும் அறியாத குழந்தையாயிருப்பதாகவே நினைத்திருக்கிறேன். சிறுபிராயத்தில் நான் கடற்கரையில் ஓடுகளையும் கூழாங்கற்களையும் பொறுக்கிக்கொண்டு விளையாடினதுபோல், இப்போது இந்தப் பிரபஞ்சமாகிய மகாசமுத்திரத்தின் கரையில் நின்று அவற்றைப்பார்க்கிலும் சற்று சித்திரவிசித்திரமான ஓடுகளையும் பளபளப்பான கற்களையும் பொறுக்கிக்கொண்டு திரிகிறேனேயொழிய அந்தக் கடலில் புகுந்து அதில் என்ன புதுமையிருக்கின்றதோ அதைச் சிறிதும் கண்டறியாதவனுயிருக்கிறேன்" என்று அவரே ஒருதடவையில் சொல்லியிருக்கிறார்.

1667-ஷுத்தில் அவர் அந்த வித்தியாசாலை அதிகாரசபையாருள் ஒருவராக நியமிக்கப்பட்டு ஸகலசாஸ்திர பண்டிதரெனப் பொருள்படும் மாஸ்தர் அவ் ஆர்ட்ஸ் என்ற பட்டமும் பெற்றார். அப்புறம் இரண்டுவருஷத்துக்குப்பிறகு டாக்டர் பாரோவுக்குப் பதில் அங்கே கணிதசாஸ்திரபண்டிதராக நியமிக்கப்பட்டார். அக்காலத்தில் அவர் நயநசாஸ்திரத்தைப்பற்றி லத்தீன்பாஷையில் ஒரு உபந்நியாஸமும் செய்தார். இதற்குப்பிறகு வெகு சீக்கிரத்திலேயே அவர் ராஜகீய சபையாருள் ஒரு அத்தியக்ஷராகவும் நியமிக்கப்பட்டு, அந்தச் சபையாருக்கு நிறம் ஒளி இவைகளைப்பற்றிய தன்னுடைய கொள்கையையும், தான் புதிதாய்க் கண்டுபிடித்த தூரதிருஷ்டிக் கண்ணுடியினுடைய விஷயங்களையும் தெளிய உரைத்தார். இப்படியிருக்க அவருடைய தேகசவுக்கியம் தப்பிப்போயிற்று. அதற்குக் காரணம் என்னவெனில், அவர் 20 வருஷகாலம் வெகு சிரமப்பட்டு வெகு திரவியம் செலவுசெய்து எழுதிவைத்த கணக்குக்களெல்லாம் விளக்குவீழ்ந்து எரிந்துபோக, அதனுல் மனதுக்கு மிகவும் கிலேசமுண்டானதேயாம். அவர் கணக்கெழுதிவைத்த கடிதங்களின்மேல் அவருடைய அருமையான நாயொன்று எரிந்துகொண்டிருந்த தீபத்தைத் தள்ளிவிட்டதாம். பிறகு அவர் அந்த நாயைப்பார்த்து, "ஓ நீசெய்த தீங்கு இப்படிப்பட்டதென்று உனக்குச் சிறிதும் தெரியவில்லையே" என்று கதறினுராம். அப்போது அவர் அதைப்பற்றிச் சிலர்க்குப் புதுமையாகக் கடிதமெழுத, அதனுல் நியூட்டனுக்குச் சித்தப்பிரமை பிடித்ததென்ற வதந்தி எங்குமுண்டாயிற்று. ஆயினும் இது நடந்த சிலநாளையில் அவர்க்கு மறுபடி தேகம் சவுக்கியப்பட்டது. சவுக்கியப்பட்டபிறகு தங்கசாலை விசாரணைத்தலைவராக நியமிக்கப்பட்டார். அது வருஷத்தில் 6000 ரூபாய் வருமானமுள்ளது. அப்புறம் பார்லிமெந்துசபைக்கு ஒரு அத்தியக்ஷராகவும் ஏற்படுத்தப்பட்டார். பிறகு 1704-ஷு அவர்

தான்செய்த நேத்திரசாஸ்திரத்தைப்பற்றிய பிரபந்தத்தைப் பிரசுரம் செய்தார். ஆயினும் அபூர்வமான அந்தக் கிரந்தத்தினுடைய அருமையைப் பூரணமாய்க் கண்டறிந்து தற்காலத்தில் எவரும் அதைக் கொண்டாடவில்லை. இவ்வளவு பெருமைகளோடுகூட 1705–ஆம் வருஷத்தில் மகாராணியார் கொடுத்த நைட் என்ற பட்டப் பெயரும் பெற்றுக் கடைசியாய்த் தம்முடைய 85–வது வயதான 1727–ஆம் வருஷம் மார்ச்சு மாதம் 20வ தேகவியோகமாயினர்.

அவர்காலத்திற்குப்பிறகு அவர் செய்துவைத்த இரண்டு கிரந்தங்கள் பிரசுரம்செய்யப்பட்டன. அவர் எழுதிவைத்த விஷயங்கள் சேர்த்துக்கட்டிய புத்தகங்களாய் அநேகமிருந்ததுபோக நீளக்கடிதத்தில் 8000 பக்கங்களிருந்தனவாம். மையக்கவர்ச்சியைப்பற்றிய தோற்றம் அவர்க்கு உதிக்கும்படிச் செய்ததென்று பிரசித்தி பெற்ற மகா விருக்ஷமானது முதிர்ந்து காற்றினால் வீழ்ந்துபோயிற்று. அவருடைய கிரகம்மாத்திரம் இன்னும் அப்படியே இருக்கின்றது. அம்மாளிகையில் ஓரிடத்திலே, "இந்தப் பிரபஞ்சமும் பிரபஞ்சத்திலுள்ள தத்துவங்களும் இருளில் முன்னே மூழ்கிக்கிடந்தன; நியூட்டன் அவதரிக்கும்படி சுவாமி சங்கற்பித்தார். யாவும் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசித்தன" என்னும் கருத்துள்ள அங்கிலேய மதாசாரியரான போப்பு என்பவரால் எழுதப்பட்ட வரிகளுடன் சலவைக்கற்பீடமொன்று அமைக்கப்பட்டிருப்பதை நாளைக்கும் காணலாம்.

குடும்பவாழ்க்கையும் கடமைகளும்.

ஒரு குடும்பத்தார் ஒத்துச் சுகமாய் வாழ்ந்துகொண்டிருப்பதற்கு அவர்கள் ஒருவர்க்கொருவர் நேசம்பாராட்டிக்கொண்டு ஆதரவாயிருப்பதுமாத்திரமே போதாது. எல்லோரும் அவரவர்க்குரிய கடமைகளையும் தவறாமல் செய்துகொண்டு வரவேண்டும். கடமையாவது, இனிப்பாயிருந்தாலும் இராவிட்டாலும் அவரவர் அவசியம் செய்யவேண்டிய நியாயமான காரியங்களாம். வசிக்க வீடு, உடுக்க உடை, உண்ண உணவு, படுக்கப் பாய்முதலிய தமக்குத் தேவையான யாவும் நாள்தோறும் சித்தமாயிருக்கக் காணும்போது சில சிறுவர்கள், இப்பொருள்கள் எல்லாம் தமக்குத்தாமே வருகின்றனவென்று நினைத்து, அவை தமக்குக் கிடைக்கின்றவழி இன்னதென்பதை முற்றும் மறந்துவிடுகிறார்கள்.

ஆறு பிராயமுள்ள பையன் ஒருவன் ஒருகால், இனி என்னை நானே பாதுகாத்துக்கொள்வேன். ஒருவருடைய உதவி எனக்கு வேண்டுவதில்லை; குழந்தைகளைப்போல் இனி ஒருவரும் எனக்கு உடை உடுத்தவும்வேண்டியதில்லை, உணவு ஊட்டவும்வேண்டு

வதில்லை; நானே ஆடை அணிந்துகொண்டு சோறும் எடுத்துப் புசிப்பேன் என்று இப்படிப் பெருமை பேசிக்கொண்டிருந்தான்.

அண்டையிலிருந்து அதைக் கேட்டுக்கொண்டிருந்த அவனுக்குச் சற்று மூத்தவனான ஒரு பையன், ஆம், நீ சொல்வது மெய்தான். உனக்கு உண்டு உடைதரித்துக்கொள்ள நன்றாய்த் தெரியும். நல்லது அதிருக்கட்டும்; உனக்கு உண்ண உணவு கிடைக்காமற்போனாலும், உடுக்க உடை கிடைக்காமற்போனாலும் அப்போது நீ என்னசெய்வாய் என்றான். அதற்கு அச்சிறுவன், ஆனாலென்ன, கடைக்குப்போய் வேண்டியதை வாங்கிக்கொள்கிறேன் என்று சொல்ல, அவன், மெய்தான்; கடையில் வேண்டியதை வாங்கிக்கொள்ளலாம்; அவை வாங்குவதற்குப் பணம் வேண்டுமே, அதற்கு என்னசெய்வாய் என்று கேட்க: சிறுவன், பணத்துக்கென்ன குறைவு; அய்யாவைக் கேட்டு வாங்கிக்கொள்கிறேன் என்றான். இப்போது பார்த்தாயா? உன்னை நீயே பிறருதவியில்லாமல் காத்துக்கொள்வதற்கு இல்லையே! அய்யா உனக்கு உண்டி யுடைகளாவது அவற்றை வாங்கப் பணமாவது கொடுத்தாலொழிய உனக்குத் தேவையானது கிடைக்கமாட்டாதல்லவா? என்று மூத்தவன் சொல்ல, அதுகேட்டு இளையவன், ஆம், இப்போது நீ சொல்வது சரிதான்; ஆனால் நம்முடைய தந்தைக்குப் பணம் எங்கிருந்து கிடைக்கிறது என்று வினவ, நம்ம தகப்பனார் நாள்முழுதும் வேலைசெய்து துட்டு சம்பாதிக்கிறாரென்றான்.

இவர்கள் இப்படிப் பேசிக்கொண்டிருக்கையில் பொழுதுபோகிற தருணமாகிவிட்டது; வெளியே வேலைசெய்யப்போயிருந்த தகப்பன் பகலின் அதிகவெப்பத்தினாலும் காலைமுதல் தொழிற்சாலையில் ஓயாது உழைத்த வருத்தத்தாலும் மிகவும் களைத்து ஓய்ந்தவனாகி வீட்டுக்குவந்தான். அவன் வீட்டுக்கு வெளியே வருவதைப்பார்த்து மகன் அவனிடத்திற்கோடி, நீங்கள் இந்நேரம் எங்கே போயிருந்தீர்களென்று கேட்க, அவன், வேலைசெய்யத் தொழிற்சாலைக்குப் போயிருந்தேனென்றதற்கு மகன், அய்யா, தொழிற்சாலைக்குப் போய் அங்கே நாள்முழுதும் வருந்தி வேலைசெய்வது உங்களுக்கு இனிப்பாயிருக்கிறதா? அதைப்பார்க்கிலும் நம்முடைய தோட்டத்திலே பூஞ்செடிகளின் மத்தியிலுட்காந்து விநோதமாய்ப் புத்தகங்களைப் படிப்பதும், உல்லாசமாய் உலாத்துவதும், இனிப்பாய்ப் பேசுவதுமாகப் பொழுதுபோக்குவது மிகவும் ஆநந்தமாயிராதா என்றான்.

அதுகேட்டுத் தந்தை அத்தோட்டத்தில் அமைத்திருந்த ஒரு நாற்காலியில் உட்காந்து மகனையெடுத்து மடியில் உட்காருவித்துக்கொண்டு, குழந்தாய் நீ சொல்வது சரிதான். தொழிற்சாலையிலே போய் வருந்தி உழைப்பதைப்பார்க்கிலும் நமது தோட்டத்திலே பூஞ்செடிகளின் மத்தியில் பரிமளத்தோடு குளிர்ந்த காற்றடிக்க உட்காந்து, நீங்களெல்லாரும் சுற்றிலும் களித்து விளையாடிக்கொண்டிருக்க

விநோதமாய்ப் படித்துக்கொண்டு பொழுதுபோக்குவது எனக்கும் சந்தோஷமே; ஆயினும் அப்படி நான் சும்மா உட்காந்திருக்க நினைக்கும்போதெல்லாம் ஏதோ ஒன்றுவந்து என்னைக் கடித்துக் கொட்டுகின்றது; இல்லாவிட்டால் நான் அப்படியே உட்காந்து பொழுது போக்கிக்கொண்டிருப்பேன் என, மகன், அய்யா அப்படி உங்களை எது கொட்டுகின்றது? வண்டா குளவியா என்றதற்கு, தகப்பன், அது வண்டுமன்று, குளவியுமன்று; இவைகளைப்பார்க்கிலும் மிகக் கொடியதான வேறொரு பொருள். நான் சும்மா உட்காந்திருக்கும்போதெல்லாம் அது, நீ இப்படிச் சும்மாயிருப்பது மிகவும் பிசகு, இப்படிச் சோம்பேறியாய் உட்காந்திருந்தால் உன் பெண்சாதி பிள்ளைகளுக்குச் சோறு துணி வாங்கிக்கொடுத்து அவர்களைக் காப்பாற்றுகிறது யார்? நீயும் உன் இனத்தாரும் சவுக்கியமாய் வாழ்வதற்காகப் பொருள் சம்பாதிக்கும்பொருட்டு நீ எங்கேயாவது போய் உழைத்துவரவேண்டுவது அவசியமென்று சொல்லி எப்போதும் என்னைத் தூண்டுகின்றது. அப்படித் தூண்டுவதென்னவென்று கேட்கிறாயோ? அதுதான் நம்மை ஒருபோதும் கைவிடாத நேசனான மனச்சாட்சியென்பது. இம்மனச்சாட்சி எப்போதும் நியாயமானவைகளையே செய்யவேண்டுமென்று எனக்கு உபதேசிக்கின்றது; சும்மா விலாசமாய் உட்காந்திருப்பதைப்பார்க்கிலும் கடமையான காரியங்களைச் செய்வதில் எனக்கு அதிகமான விருப்பமுண்டாக்குகின்றது. கடமையில் எனக்குக் கருத்து உண்டாக்குவது இம்மனச்சாட்சி ஒன்றுமாத்திரமேயல்ல, மற்றொன்றுமுண்டு; அதாவது உங்களிடத்தில் எனக்குள்ள அதிகமான விசுவாஸமாம். மேலும் தான் வருந்தி உழைத்துத் தன் சுற்றத்தாரைக் காப்பாற்றுவது தருமமாயுமிருக்கின்றது. உங்களிடத்தில் எனக்கு அன்பு அதிகமாயிருப்பதுபற்றி நீங்களெல்லாரும் ஒரு குறையுமின்றிச் சுகமாயிருக்கக் காண்பதே எனக்குப் பெரிய சுகமாயிருப்பதால், அப்படி நீங்களெல்லாரும் சுகமாயிருக்கவேண்டுமென்றே நான் வருந்தி உழைக்கிறேன். ஆதலால் அவரவர் செய்யவேண்டிய காரியங்கள் கடினமானவையாயிருந்தாலும் அன்புபற்றிச் செய்யவேண்டியவையானல் அவற்றில் ஒருபோதும் வருத்தந்தோன்றாது; மிகுந்த உற்சாகமுண்டாகும் என்றான்.

"அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்."

தகப்பன் இவ்வண்ணம் சொன்னதுகேட்டு மகன், ஆயின் நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுதும் இப்படியே வருந்தியுழைத்து எங்களைக் காப்பாற்றிக்கொண்டிருக்கவேண்டுவதுதானே என்று சொல்ல, தகப்பன், அப்படி ஒருபோதும் செய்யலாகாது. அப்படி நான் செய்துவருவேனானல், உங்களுக்கெல்லாம் தீங்குசெய்தவனாவேன். ஏனெனில், நானும், உங்கள் அன்னையும் என்

றைக்காவது உழைக்கச் சக்தியில்லாமல் நோயுற்றுவது இருக்கும் படியாகும்; அல்லது தள்ளாமையாவது வரும்; ஒருவேளை இறந்து போனாலும் போவோம். அப்படி பிள்ளைகளுக்குமுன் பெற்றோர் இறந்துபோவது உலகத்தில் ஸஹஜமே. தெய்வச்செயலால் அப்படியே நேரிடுமானால் அப்போது உங்கள் கதி என்னவாகும்? உள்ள நாள் உள்ளமட்டும் உங்களை ஒருவேலையும் செய்யவொட்டாமல் வீட்டில் நிழலிலேயே உட்காரவைத்துக் காப்பாற்றிவிட்டுத் திடீரென்று இறந்துபோனால், நீங்கள் அப்புறம் திக்குத்திசை தெரியாமல் நடுக்கடலில் அகப்பட்ட மரக்கலம்போல ஒருவழியும் தோன்றாது அல்லாடிப்போவீர்கள். ஆதலால் பெற்றோர்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமையாவது அப்பிள்ளைகள் உலகத்தில் உள்ளநாள்மட்டும் ஒருபோதும் வருத்தப்படாதபடி தம்மையும் தம்மினத்தாரையும் காப்பாற்றிக்கொண்டு பின்னும் உலகத்தார்க்கு உபயோகமான நற்காரியங்களைச் செய்யும்படியான வழிகளை அவர்களுக்குக் கற்பித்துக் கொடுப்பதேயாம்.

மனிதர்கள்மாத்திரமேயல்ல; பசு பக்ஷி மிருகாதிகளும் தம்மைத் தாமே காத்துக்கொள்ளவேண்டிய வழியைத் தமது குட்டிகளுக்குக் கற்பித்துக்கொடுத்து, அப்படிக் காத்துக்கொள்ளும்படியான வயது அவைகளுக்கு வந்தவுடனே தாம் அவைகளைப்பற்றிக் கவலைகொள்ளாமல் ஒதுங்கிவிடுகின்றன. பூனை தன் குட்டிகளைப் பார்த்துச் சீறுவதை நீ பலதரம் பார்த்திருப்பாயே. அக்குட்டிகள் மிகச் சிறியவையாயிருக்கும்போது அவற்றைப்பார்த்துப் பூனை அப்படிச் சீறுகிறதா? இல்லை. அக்காலத்தில் அவற்றை அதிகமாய்ச் சீராட்டி ஊட்டி வளர்த்து விளையாடவும் கற்றுக்கொடுத்து, அவை தம்மைத்தாமே காத்துக்கொள்ளவேண்டிய வழிகளையும் கற்பித்துக்கொடுக்கின்றது. பிறகு சீறுவதற்குக் கருத்து என்னவெனில், இப்போது உனக்கு யோக்கியவயது வந்துவிட்டது; இனி நான் உன்னைப் போஷிக்கமாட்டேன். நீயே உனக்குவேண்டிய இரைமுதலியவைகளைத் தேடிக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்பதேயாம்.

பறவைகளும் இப்படியே தம் குஞ்சுகளுக்குக் கற்பிக்கின்றன. பறவைக்குஞ்சுகளுக்கு இறகுமுளைத்து அது உறுதிப்பட்டவுடனே பெரியபறவை குஞ்சுகளுக்குப் பறக்கக் கற்பித்துக் கொடுப்பதை நீ எப்போதாவது பார்த்திருக்கிறாயா? பறக்கக் கற்றுக்கொண்டபின்பும் நன்றாய் நெடுந்தூரம் பறக்கத் தெரிந்துகொள்ளுமளவும் பெரியபறவை குஞ்சுகளை இரைகொடுத்துக் காத்துக்கொண்டிருக்கிறது. குஞ்சுகளுக்கு நன்றாய்ப் பறக்கச் சக்தியுண்டாகித் தமக்குத்தாமே இரைதேடிக்கொள்ளத் திறமையும் வந்தபின்பு பெரியபறவை அக்குஞ்சுகளைப்பற்றிக் கவலைகொள்வதில்லை. இவ்வண்ணம் இவ்வுலகம் முழுவதும், முதலில் தம் குழந்தைகளை உணவுமுதலி

யவை அளித்துக் காப்பாற்றிப் பின்பு அவற்றிற்குத் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ளவேண்டிய வழிகளைக் கற்பித்துக்கொடுப்பது பெற்றோருடைய கடமையாயிருக்கிறது என்று சொன்னான்.

அதுகேட்டு அச்சிறுவன் சற்று விசனத்தோடு, ஆயின் நாங்கள் சற்றே வல்லவர்களாகி வெளியேபோய்ச் சம்பாதிக்கத்தக்கவர்களானபிறகு நீங்கள் எங்களைப்பற்றிக் கவலைகொள்ளாமல் உபேக்ஷைசெய்துவிடுவீர்களோ என்று கேட்க, தகப்பன், குழந்தாய் கூடுமானால் அப்படியே செய்யலாம். ஆயினும் நீங்கள் கல்வி கேள்விகளில் மேன்மேலும் தேர்ச்சியுடையவர்களாகி நற்குண நற்செய்கைகளும் பெற்றோர்களிடத்தில் நன்றிபாராட்டும் குணமும் உடையவர்களாக ஆக, எங்களுக்கு உங்களிடத்திலுள்ள பிரீதியும் பதின்மடங்கு அதிகமாகும். அப்போது நாமெல்லாம் ஒருவர்க்கொருவர் நேசர்கள்போலாவோம். அவ்வளவேயொழிய பிரீதி ஒருபோதும் மாறிப்போகாது. மனிதர்களுள் தாய்க்குத் தன் குழந்தையினிடத்தில் எவ்வளவு அன்பு இருக்கிறதோ அவ்வளவு மிருகஜாதிகளிலும் உண்டு. ஆனதுபற்றியேயல்லவா "காக்கைக்குத் தன்குஞ்சு பொன்குஞ்சு" என்ற பழமொழியும் வழங்குகின்றது. ஆயினும் மனிதர்களுக்குள்ள அன்பு இவ்வற்பப் பிராணிகளுக்குள்ள அன்பைப்போலல்ல: அற்பப்பிராணிகளுக்குள்ள அன்பு ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்துபோனால் அவ்வளவோடு ஒழிந்துபோகின்றது; மனிதர்களுக்கோ ஒருவர்க்கொருவர் நம்பிக்கையும் மரியாதையும் விசுவாஸமும் செம்மையாய் உண்டாகும்போது பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஆதியிலிருந்த அன்பு நேசமாகமாறி ஆயுளளவும் நீடித்திருக்கின்றது. அப்படி அன்பில்லாத மனிதர்கள் எக்காலத்தும் ஏற்றம்பெறாமல் அவதிப்படுவார்கள்.

'என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.''

மேலும் மனிதர்கள் தம்முடைய குழந்தைகளைப் பசு பக்ஷி மிருகாதிபோல அவ்வளவு சீக்கிரத்தில் வெளியே அனுப்பிவிடமாட்டார்கள். ஏனெனில், ஒரு பூனைக்குட்டிக்கும் பறவைக்குஞ்சுக்கும் கற்பிப்பதைப்பார்க்கிலும் நம்முடைய குழந்தைகளுக்குக் கற்பிக்க வெகுகாலம் செல்வதோடுகூட மிகுந்த கருத்தும் வருத்தமும் ஏற்றுக்கொள்ளவேண்டும். உங்களுடைய சரீரத்தைப்போலவே புத்தியும் திடப்பட்டுச் சுகித்திருக்கும்படி செய்யவேண்டும். மேலும் உங்களுக்கு விஷயங்களைப்பற்றி யோசிக்கவும், பேசவும், கற்பிப்பதோடுகூட உண்ணவும் உறங்கவும் நிற்கவும் நடக்கவும் ஓடவும், கடைசியாய் உலகத்தார்க்கு உபயோகப்படும்படி யோக்கியனாயிருக்கவும் கற்பித்துக்கொடுக்கவேண்டும். பிறர் உனக்கு உதவிசெய்ததுபோலப் பிறர்க்கு உதவி செய்யவேண்டிய வகையையும் நீ கற்றுக்கொள்ளவேண்டும் என்றான்.

அய்யா! எனக்காக இவ்வளவு வேலைசெய்யவேண்டியிருக்கிறதா? எனக்கு நீங்கள் கற்றுக்கொடுக்கவேண்டியதெல்லாம் பாடம் படிக்கவும் கணக்கு எழுதவுமேயென்று நான் இதுவரையில் எண்ணியிருந்தேனே என்று அச்சிறுவன் அதிக வியப்பாய்க் கேட்க, தகப்பன், குழந்தாய், நீ கற்றுக்கொள்ளவேண்டிய விஷயம் அநேகமிருக்கின்றன. பலகையில் கணக்குப்போடவும், சட்டமெழுதவும் கற்றுக்கொள்வதற்கு வெகுநாள் முன்னமே நீ பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள ஆரம்பித்திருக்கிறாய். பிள்ளைகளெல்லாம் குழந்தைப்பருவம் முதற்கொண்டே பிறர்செய்வதைப்பார்த்து அவ்வண்ணமே செய்கிறார்கள்; பிறர் எப்படி நினைக்கிறார்களோ அவ்வண்ணமே தாமும் நினைக்கக் கற்கிறார்கள். பலவாறு சொல்லியென்ன? நாம் சொல்லிக் கற்றுக்கொடுப்பதைப்பார்க்கிலும் தாம் கண்ணால் காண்கிற நிதரிசனப்படியே நடக்க அதிகமாய்த் தெரிந்துகொள்கிறார்கள். முக்கியமாய்ப் பிள்ளைகளுடைய கண்ணெதிரில் நடத்திக் காட்டுகிறவர்கள் பெற்றோர்களேயாகையால், பெற்றோர்கள் கற்பித்தாலும் கற்பிக்காவிட்டாலும், அவர்கள் நடத்தையெப்படியோ அப்படியே தாமும் நடக்க முயல்கிறார்கள். இக்காரணம்பற்றியே "தாயைப் பார்த்து மகளைக்கொள்" என்னும் நீதிமொழி உலகில் வழங்குகின்றது. ஆதலால் தம்மக்கள் நன்னெறி நல்லொழுக்கமுள்ளவர்களாக வாழக் கற்றுக்கொள்ளும்பொருட்டு அவ்வண்ணமே பிள்ளைகளுடைய கண்ணெதிரில் தாம் நடத்திக்காட்டவேண்டுவது பெற்றோர்களுடைய கடமையாம் என்று சொன்னான்.

அதுகேட்டு மகன், ஆயின், இப்போது உங்களுடைய நன்னடக்கையைப்பார்த்து அவ்வண்ணமே நாங்கள் நடக்கக் கற்றுக்கொள்வோமானால், பிறகு இவ்வாறே வேறு சிலர் எங்களுடைய நடத்தையைப்பார்த்துத் தாமும் அப்படி நடக்கக் கற்றுக்கொள்வார்களல்லவா? ஆதலின் நீங்கள் யோக்கியர்களாகி, நல்வழியில் நடக்கவேண்டிய மாதிரிகளை எங்களுக்குக் கற்பிப்பீர்களானால், பின்னும் பல்லாயிரம்பேர்களுக்குக் கற்பித்ததுபோலாகின்றதல்லவா? என்று சொல்ல, தகப்பன், ஆம்; இப்படி என் குடும்பத்தார்க்கும் மற்றவர்களுக்கும் நன்னெறி கற்பிக்காமல் அவர்களைச் சிறிதும் கல்வியில்லாத சோம்பேறிகளாக்கி, ஒருவேலையும் செய்யாமல் வீட்டிலுட்காந்துகொண்டு சோறுமாத்திரம் தின்பவர்களாய்ச் செய்வேனானால், நான் என்னுடைய கடமையைச் செய்யாதவனாகி அவர்களுக்குக் கடன்காரனாவேன் என்றான்.

"தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருக்கச் செயல்."

ருதுக்களின் வர்ணனை—வஸந்தருது

(தொடர்ச்சி.)

வேங்கடேசுவர பருவதத்திற்கு ஈசானியதிக்கிலுள்ள வேடச்சேரியில் பழைய மாதிரியாய் வெகு அழகான மாளிகையொன்று இருக்கிறதென்று சொன்னோமே. அற்புதமாய் அமைந்த அம்மாளிகையிலே வேடராஜன் ஒருவன் வாஸம்பண்ணிக்கொண்டிருந்தான். அவன் சுயஜாதிக்குரிய வியாபாரங்களைச் செய்யப் புகாமல் பெருந்தன்மையாயிருந்து கவுரவம் பெற்றவர்களுடைய வமிசத்தில் பிறந்தவனாகையால், சுயஜாதி ஜனங்களுக்கெல்லாம் தானே யஜமானனாகி, யதோசிதமான புத்திவிவேகமும், ஈசுவரபக்தியும், வித்தியாஸக்தியும் உடையவனாகி, கல்விப்பயிற்சியென்ற பெயரே தெரியாமல் வேட்டையாடியே ஜீவிக்கின்ற வேடர்கள் அனைவராலும் மேன்மையாகக் கொண்டாடப்பட்டு முத்துசாமியென்று பெயர்பெற்று வாழ்ந்துகொண்டிருந்தான். அவனுக்கு ரங்கசாமி என்று ஒரு குமாரனும், மோகனம், மரகதம் என்றிரண்டு குமாரத்திகளும் இருந்தனர். அவர்களுள் ரங்கசாமி நடுப்பிள்ளை. அம்மகனைத் தன்னைப்போலவே படிப்பில் பயிற்சியுடையவனாகச் செய்யவேண்டுமென்று முத்துசாமி அவனுக்கு ஐந்தாவது வயதிலே அக்ஷராப்பியாசம் செய்வித்துப் பாடசாலைக்கு அனுப்பினான். அம்மகனும் தந்தை மனங்கோணாதபடி நாள்தோறும் கிரமமாய்ப் பாடசாலைக்குப் போய்ப் படித்துக்கொண்டிருந்தான். இப்படியே இரண்டுவருஷகாலம் கழிந்தது. அப்படியிருக்க ஒருநாள் காலையில் வீட்டுவாயிலில் உட்கார்ந்து பாடம் படித்துக்கொண்டிருந்த ரங்கசாமி, அப்போது ஐந்துவயதான தன் தங்கை அவ்வாயிலுக்கு எதிரிலுள்ள பூந்தோட்டத்தில் வெகு விநோதமாய் மகரந்தங்களைக் குடித்துச் சிறகடித்துக்கொண்டு ரீங்காரம் செய்கின்ற வண்டுகளையும், விசித்திரவர்ணமான இறகுகளோடுகூடிய பலவகைத் தத்துக்கிளிகளையும் பிடிக்கப்போக, இடையிடையே உள்ள கொடிகள் காலில் சுற்றிக்கொண்டு கீழேவிழுவதும், மறுபடியும் அதை லக்ஷியம்பண்ணாமல் எழுந்தோடுவதுமாய் இப்படி விளையாடிப் பொழுதுபோக்கிக்கொண்டிருக்கக் கண்டு, தான் படித்துக்கொண்டிருந்த பாடத்தை நிறுத்திவிட்டு ஐயோ! நான் என் தங்கையைப்போலப் பெண்ணாகவாவது பிறந்திருக்கக்கூடாதா? அல்லது ஆணாகப் பிறந்தாலும் எப்போதும் சிறுபிள்ளையாகவே இருக்கலாகாதா? அப்படியில்லாமல் ஆணாகப் பிறந்து தக்க வயதும் வந்துவிட்டதனாலல்லவோ தங்கையைப்போல உல்லாஸமாக விளையாடுவதற்கில்லாமல் படிப்பென்ற ஒரு பெரிய நிர்ப்பந்தத்தில் அகப்பட்டுக்கொண்டு அல்லாடித் தவிக்கிறேன். இந்த நிர்ப்பந்தம் இல்லாவிட்டால் என் இஷ்டப்படி வேடிக்கையாக விளையாடித் திரிவேனல்லவா? இப்

போது பல திக்குக்களிலும் இனிப்பாய்க் கூவுகின்ற குயில்முதலான பறவைகளின் தொனிகளைக் கேட்டால், இது எப்படிப்பட்டவர்களும் உல்லாஸமாய் எழுந்து விநோதமாய்க் கூடிக்களித்து விளையாடுவதற்கேற்ற வஸந்தகாலமாயிற்றே. இம்மகோற்சவமான காலத்தில் படிப்பென்னும் ஒரு பொய்வேலையையெடுத்து மேற்போட்டுக்கொண்டு வீணே காலம்கழிக்கலாமா? உடனே எழுந்தோடிவந்து எங்களுடைய அழகையும் நாங்கள் பாடுகின்ற விநோதமான பாட்டுக்களையும் கண்டும்கேட்டும் வேடிக்கையாய் விளையாடிப் பொழுதுபோக்கலாகாதாவென்று எனக்கு நற்புத்தி போதிப்பதுபோலிருக்கின்றது. மேலும் பச்சைவர்ணவெட்டுக் கிளிகள் சிறகடித்துக்கொண்டு பசும்புற்றரைகளில் எழும்பிக்குதித்து விளையாடுவது, தம்மிடத்திற்குவந்து தங்களைப் பிடித்துக்கொண்டு விளையாடும்படி என்னைக் கூவியழைப்பதாகக் காணப்படுகிறது. வெட்டுக்கிளிமுதலிய பூச்சிகளைப் பிடிக்கக்கூடாதென்று சில சமயங்களில் தாய் நமக்குப் போதிக்கிறளே! இப்போது யோசித்துப்பார்த்தால் அது நான் படிப்பைவிட்டு ஒருபோதும் எழுந்திராதிருப்பதற்காகச் செய்த ஒரு உபாயமேயொழிய வேறல்லவெனத் தோன்றுகிறது. அப்படியில்லாமற்போனாலும், இப்போது இச்சிறு பறவைகளைப் பிடிப்பதில் எனக்கு உண்டாயிருக்கிற உற்சாகத்தில், தாய் சொன்ன பேச்சுகளில் எனக்குச் சிறிதும் மதிப்புத் தோன்றவில்லை. இதுவன்றியில், இப்பறவைகளைப் பிடிப்பதில் எனக்குள்ள உற்சாகத்தைப்பார்க்கிலும் இப்பறவைகளுக்கு என்கையில் அகப்படாமல் என்னை ஏமாற்றுவதில் உற்சாகம் அதிகமாயிருக்குமெனத் தோன்றுகிறது. இப் படிப்பென்கிற விலங்கு எனக்கு எத்தனைநாளைக்கு இருக்குமோ அதுவரையில் வஸந்தருதுவாயினும் வராதிருக்கக்கூடாதா? வஸந்தகாலம்வந்து என்னையும் இப்படிப்பட்ட நிர்ப்பந்தத்தில் கட்டிவைத்தால் எப்படி சகிக்கக்கூடும்! ஐயோ! என் துர்ப்பாக்கியத்தை நான் என்னென்று சொல்லுகிறது. இதற்கு நான் இப்போது செய்யவேண்டுவதென்ன என்றிப்படிப் பலவிதமாய் எண்ணமிட்டுக்கொண்டு தங்கையின் மேலேயே கண் வைத்துப் பார்த்துக்கொண்டு சும்மாவிருந்தான். அவனைப் பார்த்து அவனுடைய கருத்து இன்னதென்று மரகதம் தெரிந்துகொண்டு, அண்ணு, விளையாடுவோம் வருகிறுயா? நீ எப்பொழுது எதைப் பார்க்கப்போனாலும் என்னையும் கூடக் கூட்டிக்கொண்டுபோய் அதின் வரலாறு, அதனல் உண்டாகும் பிரயோஜனம் முதலியவைகளை எனக்குத் தெரியச்சொல்லி என்னை ஸந்தோஷப்படுத்திக் கொண்டிருப்பது வழக்கமாயிற்றே. அப்படிப்பட்ட உன்னைவிட்டுத் தனியே விளையாடுவது சொற்பகாலமானாலும் நெடுநேரம் ஆய்விட்டதுபோலத் தோன்றுகிறதுமல்லாமல் இவ்வளவுகாலம் வீணிற் கழித்தோமேயென விசாரமுண்டாகிறது என்று சொல்லி, அவன்

விளையாடவருவதை வெகு ஆவலோடு எதிர்பார்த்திருப்பவள் போலக் கூவியழைத்தாள்.

அப்போது பத்துப்பிராயமுள்ளவளான அவர்களுடைய அக்காள் தனக்குச் சமவயதான சிறுபெண்களைப்பார்க்கிலும் கொஞ்சம் அதிகமான விவேகமுடையவளாகி, இளமைப்பருவத்தில் சிறுமிகள் செய்யத்தக்கின வீட்டுவேலைகளையெல்லாம் நன்றாய்ச் செய்யத் தெரிந்துகொண்டு தாய்தந்தையர்களுடைய வார்த்தைகளுக்கு இரண்டாவது சொல்லாமல் "மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்" என்பதை உறுதியாக நினைத்து அதன்படியே நடந்துவந்தாள். அப்படியிருக்கையில் அவள் அன்றையதினம் அவ்வீட்டுவாயிலுக்கு எதிரில் உட்கார்ந்து ரவிக்கை தைத்துக்கொண்டிருந்தாள். அத்தருணத்தில் ரங்கசாமி தனக்கு விளையாடுவதிலிருந்த விருப்பத்தினால், தந்தை தண்டிப்பாரென்ற திகில் சிறிதுமில்லாமல் தங்கை கூவியழைத்ததைக் கேட்டவுடனே, ஓ! ஓ! மரகதம்! இதோவந்தேன், இதோவந்தேன் என்று பாடபுஸ்தகமும் பலகையும் கீழேவீழ்ந்துபோகத் திடீரென்று எழுந்து வழியிலே ரவிக்கை தைத்துக்கொண்டிருந்த தமக்கையை அலக்ஷியமாய்த் தாண்டிக்கொண்டு ஓடினான். அவன் ஓடுகிற ஓட்டத்தில் அவன்கால் ரவிக்கை தைத்துக்கொண்டிருந்த மோகனத்தின் கையில் தடுக்க, அவள் கையிலிருந்த ஊசி ஒருபக்கம், நூல் ஒருபக்கமாய்ப் போய் வீழ்ந்தன. தைத்த தையலும் கோணிப்போயிற்று. அதைப்பார்த்து மோகனம் கோபங்கொண்டு, ஆ! ஆ! என்ன அவசரம்! உன் ஆட்டத்துப்பராக்கில் வழியிலிருக்கிற மனிதர்கூட உன் கண்ணுக்குத் தெரியவில்லையோ! படிக்கிற பாடத்தைவிட்டுப் புஸ்தகத்தை மூலையிலெறிந்து விளையாடப் போகிறாயோ! நல்லது! தந்தைவரட்டும், நீ படுகிற பாட்டைப்பார். தையல் அறுந்துபோன இந்த ரவிக்கையையும், கூர் ஒடிந்துபோன ஊசியையும் சிக்காய்ப்போன நூலையும் தந்தை பாராமல்போக மாட்டார் என்றிப்படித் தம்பிக்குப் பயமுண்டாகும்படி பேசிக்கொண்டு, சிதறிப்போன ஊசியை எடுத்துக்கொண்டு கலைந்துபோன தையலைச் சீர்ப்படுத்திக்கொண்டிருந்தாள்.

ரங்கசாமியோ இது இன்னதென்றுகூடக் கவனியாமல் ஒரே ஓட்டமாய் ஓடித் தங்கையோடு சேர்ந்துகொண்டான். சமீபத்தில் வந்தவுடனே அச்சிறுமி அவனைப்பார்த்து, அண்ணா, இன்றைக்கு உனக்கு விடுமுறையா? பிரதிதினம் விடுமுறையாகவேயிருக்குமானால், நாம் எப்போதும் உல்லாசமாய் விளையாடிக்கொண்டிருக்கலாமல்லவா? நாம் விளையாடுவதைப் பார்க்கப்பொறாமல் நம் அக்காள் அதோ என்னென்னவோ பேசுகிறாள் பார்! நீ படிப்பைவிட்டு எழுந்தோடாதிருப்பதில் அக்காளுக்கு எவ்வளவு சந்தோஷமோ, அதைப் பார்க்க இரட்டிப்புசந்தோஷம் நீ எழுந்தோடிவருவதில் எனக்கு உண்டாகின்றது. ஆதலால் யாரென்னசொன்னாலும், உன்னோடு

கூடி விளையாடுவதை நான் ஒருபோதும் விடமாட்டேன். இத்தனை நாழிகை வேடிக்கையாக விளையாடிக்கொண்டிருந்தேனாயினும், தனியாய்த் திரிந்ததுபற்றி, இருட்டறையில் தவிப்பவன்போலிருந்ததேயொழிய மனதுக்குச் சிறிதாவது சந்தோஷமுண்டாகவில்லை. அப்போது எவ்வளவு சிறந்தபொருளைப் பார்த்தாலும் அதன் பெருமையொன்றும் புத்தியிற்படாமல் சாதாரணமான அற்பப்பொருளாகவே தோன்றிக்கொண்டிருந்தது. அப்படி வருத்தமுற்றிருந்த எனக்கு இப்போது உன்னுடன் கூடியது எவ்வளவு சந்தோஷமாயிருக்குமோ அதை நீயே அறிந்துகொள் என்றிப்படி சமத்காரமாய்ப் பேசினாள். அந்தப் பேச்சுகளைக் கேட்டு ரங்கசாமி மிகவும் மகிழ்ச்சியடைந்து, மரகதம்! உன் கோரிக்கை எப்படிப்பட்டதோ அப்படிப்பட்டதுதான் என்னுடைய கோரிக்கையும். நீ இப்பசும்புல்தரையில் வெட்டுக்கிளிகளைப் பிடிக்கப் படுகிற பாட்டைப் பார்க்கப்பொறாமல் உடனே இவ்விடம் ஓடிவந்து சேர்ந்தேன். இதுவரையில் நீ ஆடிக்கொண்டிருந்த அற்பமான விளையாட்டு வேண்டாம். என்னோடுகூடவா; தோட்டத்திற்குப் போய் நான்கு பக்கமும் திரிந்து விளையாடுவோம்; நமக்குத் துணையாக நம்முடைய கஸ்தூரியையும் அழைத்துக்கொண்டு வருகிறேன் என்று சொல்லிப் போய் வாயிலில் கட்டியிருந்த நாயை அவிழ்த்துவிட்டு, கஸ்தூரி கஸ்தூரியென்று கூவிக்கொண்டோடினான். அந்த நாயும் அதிசந்தோஷமாய் அவன் பின்னேயே ஓட ஆரம்பித்தது. மரகதம் சிறுபெண்ணாகையால், நாயோடுகூட ஓடுகின்ற அவனைப் பின்தொடர்ந்து போகமாட்டாமல், அண்ணா, நான் வரவேண்டாமா? என்னை விட்டு ஓடிப்போகிறாயே? இத்தனைநாழிகையாய் உன் வரவை நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது இதற்குத்தானா? இதோவந்தேன் இதோவந்தேன், சற்றுநில் என்று கூவிக்கொண்டே பின்தொடர்ந்தோட, அவன் நிற்காமலே அதிவேகமாய் ஓடி வேலியைத் தாண்டிக்கொண்டு தோட்டத்துள் பிரவேசித்தான். மரகதம் அத்தோட்டத்து வேலியைத் தாண்டமாட்டாமல் தோட்டத்துக்கு வெளியிலேயே நின்று கிலேசப்பட்டுக்கொண்டிருந்தாள். மோகனம் இவற்றையெல்லாம்பார்த்துத் தான் தைத்துக்கொண்டிருந்த ரவிக்கையை ஊசிநூலோடுகூட அப்படியே ஓரிடத்தில் பத்திரமாய் வைத்துவிட்டு எழுந்து தன் தங்கையிருக்குமிடம் போய்ச்சேர்ந்து அச்சிறுமியை மெல்ல வேலியைத் தாண்டுவித்துத் தானும் அவளுடன் தோட்டத்துட்சென்றாள். அப்போது அவ்விடத்தில் ரங்கசாமி என்னசெய்துகொண்டிருந்தானென்பீர்களோ? பெரிதான எலிவளையொன்றில் ஒரு எலி தலையை வெளியே நீட்டிக்கொண்டிருக்கக் கண்டு அதைப் பிடிப்பதற்குத் தன்னாலான முயற்சிசெய்தும் சாத்தியப்படாமற்போகவே நாயை ஏவ, அதுவும் அவ்வளைக்குள் தலையை நுழைத்தும் அவ்வளைக்குள் சிறிதுதூரம் சென்றும், எலியைப் பிடி

க்கக்கூடாமையால், முன்னங்காலால் வளையைத் தோண்டிக்கொண்டிருக்க, அதற்குத் துணையாய் ரங்கசாமியும் ஒரு சிறு குச்சை எடுத்து வளையை வெட்டிக்கொண்டிருந்தான். அப்போது மோகனம் அவனைநோக்கி, தம்பி இதென்னவேலை? எழுதிப்படிக்கிற வேலையைவிட்டு எலிபிடிக்க ஓடிவந்தாயே! இப்படிப்பட்ட வீண்வேலை செய்யக்கூடாதென்று தந்தை உனக்கு எத்தனைதரம் சொல்லியிருப்பார். அப்படியிருந்தும் நீ அதைக் கவனியாமல் விளையாடி வீண்பொழுது போக்குகிறாயே! இனியாவது இந்த வேலையற்ற வேலையை விட்டு எழுந்துவா; வாராமற்போனால் தகப்பனாரோடு சொல்லி உன்னை அடிக்கச்செய்வேன் என்றிவ்வாறு நயபயமாய்ப் பேசி அவனுடைய விளையாட்டுக்கு விரோதம்செய்யப் பார்த்தாள். அவள் என்னசொல்லியும் அவளுடைய பேச்சை லக்ஷியம் பண்ணாமல் ரங்கசாமி முன்னிருந்ததைப்பார்க்கிலும் அதிக வேகமாய் வளைதோண்டிக்கொண்டு, குழந்தாய் எலிபிடிப்போம் வாவென்று தங்கையையும் தன்னிடத்திற்குக் கூவியழைத்தான்.

இதற்குள் சுற்றிலுமுள்ள புலங்களையும் தோட்டங்களையும் பார்த்துவரும்படி விடியயாமத்திற்கே எழுந்துபோன முத்துசாமி அவைகளைப் பார்த்துக்கொண்டு அத்தோட்டத்துவழியாய் வர, அங்கே இவர்களைக் கண்டு, இப்பிள்ளைகளெல்லோரும் வந்து இங்கென்னசெய்கிறார்களென்று சிந்தித்துக்கொண்டே அவர்களண்டை வந்தான். வளைதோண்டிக்கொண்டிருந்த ரங்கசாமி தகப்பனார் வருவதைப்பார்த்து மிகத் திகிலடைந்து முகம்வாடி உடல்நடுங்கி அவ்வேலையைவிட்டுச் சரேலென்றெழுந்து உடம்பில் படிந்திருந்த மண்ணையெல்லாம் துடைத்துத் தலையை நன்றாய் முடித்துக்கொண்டு நின்றான்.

தகப்பனைக் கண்டவுடனே மோகனம் நடந்த வர்த்தமானங்களையெல்லாம் ஒன்றுகூட விடாமல் அவனுக்கு அறிவித்தாள். அது கேட்டுத் தகப்பன் இருந்த ரீதியையும் அவனைக் கண்டு ரங்கசாமி நின்ற நிலையையும் பார்த்து மரகதம் தகப்பனை நோக்கி, அய்யா! அண்ணனை அடிக்கவேண்டாம். உங்களைப் பார்த்தமாத்திரத்திலேயே இவன் கருடனைக்கண்ட பாம்புபோல நடுக்கமுற்றிருக்கிறான். அக்காள் பேச்சைக் கேட்கவேண்டாம். விளையாடவாவென்று நான் அழைத்ததைக் கேட்டு இவன் வந்தானேயொழியத் தானாக வரவில்லையென்று சொல்லித் தகப்பனாரைக் கட்டிக்கொண்டு வேண்ட, முத்துசாமி புன்னகையுடன் அப்பெண்களிருவர்க்கும் சமாதானம் சொல்லி, பிறகு மகனை அண்டையில் அழைத்து, குழந்தாய், விடுமுறைநாள் தவிர மற்றத் தினங்களில் படிப்பைவிட்டு விளையாடலாமா? இதைப்பார்த்து ஐயோ பாபம் என்று நான் மன்னித்தாலும் படிப்புச்சொல்லுகிற உபாத்தியாயர் மன்னிப்பாரா? இவ்விளையாட்டினால் உபாத்தியாயர் தண்டிப்பது ஒன்று, உனக்குப் படிப்புக் கெட்

டுப்போவது ஒன்று அ-நேகவிதமான கெடுதிகளுக்கு இடமுண்டாகிறது. இக்காரியம் செய்வது நல்லதன்று. படிக்கவேண்டிய தினங்களில் கிரமமாய்ப் படித்து விடுமுறைதினங்களில் விளையாடுவாயானால் உன்னை எவரும் ஒன்றும் சொல்லமாட்டார்கள் என்று அவனுக்குப் புத்திமதிகள் சொல்லிப் பிறகு அம்மூன்று மக்களையும் அழைத்துக்கொண்டு அத்தோட்டத்திலிருந்து வீட்டுக்குப் போகப் புறப்பட்டான்.

வீட்டுக்குப் போம்போது தற்செயலாய் எங்கேயோ போய்க் கொண்டிருந்த ஸோமேசுவரத்து குருக்கள் ஒருவன் அவ்வழியாக அவர்கள் எதிரே வந்தான். அவன் வேடர் தலைவனான முத்துசாமியைக் கண்டு எங்கே இந்நேரத்தில் மக்களைக் கூட்டிக்கொண்டு போகிறீர்களென்று கேட்க, முத்துசாமி குருக்களைப்பார்த்து, ஸ்வாமி தண்டம் ஐயா! எங்கிருந்து வருகிறீர்களென்று மரியாதையாய் அவனை வணங்கி க்ஷேமஸமாசாரம் விசாரித்துப் பிறகு, தோட்டத்தில் பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருக்கும்போது தான் வந்து அவர்களை அழைத்துக்கொண்டு போகிற சமாசாரத்தை அவர்க்குத் தெரிய உரைத்தான். அதைக்கேட்டுக் குருக்கள் புன்னகைகொண்டு குழந்தைகளுக்கு விளையாட்டிலேதானே விருப்பம் அதிகம்; அதற்குக் கேட்கவேண்டுவதென்னவென்று சொல்லிப் பிறகு, இப்பொழுது கொஞ்சம் காரியவசமாய் நான் அடுத்த கிராமத்துக்குப் போய்வரவேண்டியிருக்கிறது; அதற்காகவே போகிறேன். சீக்கிரமே திரும்பிவந்துவிடுவேன். வருகிறவாரம் ஸோமநாத ஸ்வாமிக்கு வஸந்தோச்சவம் ஆரம்பமாகிறது. அந்த உச்சவத்திற்கு நீங்கள் இந்த வருஷமும் வழக்கப்படியே வந்து ஸ்வாமியை ஸேவித்து அர்ச்சனை முதலியவைகள் செய்வித்து ஸ்வாமி பிரசாதம் பெற்றுக்கொண்டு போகவேண்டும். மேலும் அதற்கு அனுகூலமாய் இவ்விடத்துப் பாடசாலை வித்தியார்த்திகளுக்குப் பத்துதினம் செலவுகொடுக்கும்படி நிச்சயித்திருப்பதாய்ப் பாட்சாலை உபாத்தியாயர் என்னுடன் சொல்லியிருக்கிறாராகையால் நீங்கள் வரும்போது ரங்கசாமியையும் கூட அழைத்துக்கொண்டு வரலாம். தப்பாமல் திருவிழாவுக்கு வரவேண்டுமென்று சொல்லிச் செலவுபெற்றுக்கொண்டு குருக்கள் போய் விட்டான். மக்களை அழைத்துக்கொண்டு முத்துசாமியும் வீடு போய்ச் சேர்ந்தான். அன்று முதல் ரங்கசாமி தந்தைசொல் தவறாமல் நாள்தோறும் கிரமமாய்ப் படித்துக்கொண்டு விடுமுறை நாள் எப்போ வரும்; நம்மிஷ்டப்படி எப்போ விளையாடலாம் என்று விடுமுறைகாலத்தின் வரவை எதிர்பார்த்து நாளெண்ணிக்கொண்டேயிருந்தான். இப்படியிருக்க விடுமுறைநாள் வந்து விட்டது.

(இன்னும் வரும்.)

முசுக்கட்டைச்செடி பயிராக்குதல்.

வடமேற்கு மாகாணத்தில் ஸஹராம்புரத்திலுள்ள தோட்டத்துப் பரிபாலகரொருவர் பட்டுப்பூச்சிகளுக்கு ஆகாரமான இலைகளைத் தரும் முசுக்கட்டைச்செடி (mulberry) பயிராக்கும் விதத்தைப்பற்றித் தான் அனுபவத்திற்கண்ட விஷயங்களை ஒருவாறு எழுதியிருக்கிறார். அது நமது தேசத்தில் தோட்டப்பயிர்செய்பவர்களுக்கும் மற்றவர்களுக்கும் உபயோகமாயிருக்குமெனக் கருதி அதன் கருத்தைச் சுருக்கமாய் அடியில் எழுதுகிறோம்.

ஸஹராம்புரத்துத் தோட்டத்தில் பலவகைப்பட்ட முசுக்கட்டைச் செடிகள் பயிராக்கப்படுகின்றனவென்றாலும், அவை யாவும் அத்தனையாகச் சிறந்தவைகளல்ல. அவற்றுள் இரண்டொருவகைச் செடிகளும், லாகோரிலிருந்து அழைப்பிக்கப்படும் ஒருவகையான செடியுமே சிரேஷ்டமானவைகளாய் இருக்கின்றன. அவற்றுள்ளும் மல்டிகாலிஸ் (multicaulis) என்ற ஒருவகைச் செடியே மிகவும் சிரேஷ்டமானது. ஏனெனில் அது மற்றச் செடிகளைப்பார்க்கிலும் அதிக சீக்கிரத்தில் தளிர்த்துத் தழைப்பதாலும், அதிசுலபமாய் விருத்திசெய்விக்கத்தக்கதாயிருப்பதாலுமேயாம். ஆயின் மற்ற இரண்டொருவகைச் செடிகளும் குணத்தில் இதற்குக் குறைந்தவையல்ல.

பலஜாதிச் செடிகளும் எல்லாவிடங்களிலும் ஒரேயளவாய் ஒரே மாதிரியாகப் பயிராகமாட்டாவென்பது யாவர்க்கும் தெளிவாய்த் தெரிந்தவிஷயமேயல்லவா? ஆகையால் இவ்விடத்தில் விளைவது போலவே செடிகள் மற்றவிடங்களிலும் இருக்குமென்று எண்ணக்கூடாது. பூஸாரமும் சீதோஷ்ணநிலையும் வேறுபட்டால் அதற்குத் தக்கபடி செடிகளின் செழிப்பும் இலைகளின் குணமும் வெவ்வேறளவாக வித்தியாஸப்படும்.

முசுக்கட்டைச் செடிகளை விதைவிதைத்துப் பயிர்செய்வதைப் பார்க்கிலும் பதிபோட்டுப் பயிராக்குவது மிகச் சிறந்ததாயும் சுலபமாயுமிருக்கிறதென்று அனுபவத்தால் கண்டறியப்பட்டிருக்கிறது. விதைத்துப் பயிர்செய்தாலும் செடிகள் செழிப்பாகவே வளர்கின்றனவாயினும் அப்படிச் செழிக்கக் காலதாமதமாகின்றது. தேசாந்தரங்களுக்கு அனுப்பவேண்டுமானால் அப்போது பதிபோடச் செடிகளாய் அனுப்புவதைப்பார்க்கிலும் விதைகளாய் அனுப்புவதே மிகவும் அனுகூலமானது. செடிகளாய் அனுப்பினால் கஷ்டமும் செலவும் அதிகமாகும். விதையானால் எளிதில் எவ்விடத்திற்கும் கொண்டுபோக அனுகூலமாயிருக்கும்.

முசுக்கட்டைச்செடி வெகுசீக்கிரத்தில் இலையுதிர்க்கும் தன்மையுள்ளது. சீதகாலத்தில் அது அதிக சீக்கிரத்தில் இலையுதிர்த்துவிடும். ஆகையால் அக்காலத்திற்கு அனுகூலமாய்ப் பதிபோட்டுப் பயிர்செய்துகொள்ளவேண்டும். முசுக்கட்டைச்செடிகளைப் பதிபோட்டுப் பயிர்செய்கின்றவிதம் எப்படியெனில், நல்ல மணற்பாங்குநிலமாய்ப் பார்த்து நன்றாய்ப் பதினெட்டு அங்குலம் ஆழம் கொத்திச் சமப்படுத்தி, பன்னிரண்டு அடி அகலமும் நீர்பாய்ச்சுவதற்கு அனுகூலமானவளவு நீளமுமுள்ள பாத்திகளாகக் கட்டி நாற்றங்கால் ஏற்படுத்தி, அந்நாற்றங்காலில் 18 அங்குலத்திற்கு ஒருவரிசையாய் ஒவ்வொரு வரிசையிலும் 9 அங்குலத்திற்கு ஒரு துண்டு விழுக்காடு ஒவ்வொரு துண்டிலும் பாதி பூமியிற் புதையும்படி நட்டுப் பயிராக்கவேண்டும். தண்ணீர் பாய்ச்சுவதற்கு அனுகூலப்படாத நிலமாயிருந்தால் வரிசைக்கு வரிசை இடைவெளி 12 அங்குலமும், ஒவ்வொரு நாற்றுக்கும் தூரம் 6 அங்குலமும் இருந்தாலும் போதுமானதுதான். இதனால் நாற்றங்காலும் சிறிதாயிருக்கலாம்; தண்ணீர் வார்க்கிற வருத்தமும் அதிகமிராது. தண்ணீர் பாய்ச்சுவதற்கு அனுகூலமாயிருந்தால் கோடைகாலத்தில் வாரத்திற்கு ஒருமுறை தண்ணீர் பாய்ச்சுவது போதுமானது; இல்லாத பக்ஷத்தில் தண்ணீரெடுத்து வார்த்துக்கொண்டு வரவேண்டும். பதிபோடுகிற நாற்றங்காலுக்கு நிழலாவது எருவாவது ஒன்றும் வேண்டுவதில்லை. கோடைகாலம் முழுதும் தப்பாமல் தண்ணீர்மாத்திரம் பாய்ச்சிக்கொண்டு வந்தால் கோடைகழித்தவுடன் அந்நாற்றுக்களெல்லாம் பெயர்த்துவைப்பதற்கு அனுகூலமாகிவிடும். நாற்றுக்களைப் பெயர்த்துவைப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட விடத்திலேமாத்திரம் நன்றாய்ப் பழகிய எருவை உபயோகிப்பது மிகவும் நல்லது.

முசுக்கட்டைமரம் நன்றாய்த் தழைத்திருக்கும்போது எந்தக் காலத்தில் வேண்டுமானாலும் கிளைவெட்டிப் பதிபோடலாமானாலும், தண்ணீர் சுலபமாய்க் கிடைக்கத்தக்க விடங்களில் கோடைகாலமே சிரேஷ்டமானது. ஏனெனில் அக்காலத்தில் கிளைகளை நாற்றங்காலில் எவ்வளவு நெருக்கமாய்ப் பதிபோட்டாலும் கெடுதி நேரிடாது.

முசுக்கட்டைச்செடி பயிராக்குவதைப்பற்றி ஒருவர் சொல்வதாவது: "இப்போது இத்தேசத்தார் பதிபோட்டுப் பயிராக்குகிற செடிகளில் விளைவதுபோல அவ்வளவு உத்தமகுணமுள்ள இலைகள் அவ்வளவு அதிகமாகப் பெரிதாய் வளர்ந்த மரங்களில் கிடைக்குமென்று நான் ஒருபோதும் நம்பவில்லை. ஆகையால் செம்மையாகமாத்திரம் பரிபாலித்துவந்தால் இப்போது நடத்திவருகின்ற பதிபோட்டுப் பயிராக்கும் உபாயத்தைப் பார்க்கிலும் சிறந்தது வேறொன்றுமில்லை; ஆயின் அதில் நான் புதிதாய் எடுத்துச் சொல்லவேண்டுவதென்னவெனில், செடிகள் அதிக நெருக்கமில்லா

மல் இடைவெளிவிட்டு அமைக்கப்படவேண்டுமென்பதே. ஏனெனில், இலைகளில் காற்றும் வெயிலும் எவ்வளவு அதிகமாய்ப் படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவை நல்ல உணவாகும். ஆனால் இது என்னுடைய சுயமான யுக்தியேயொழிய வேறல்ல" என்று சொல்லியிருக்கிறார்.

ஆகையால் முசுக்கட்டைச் செடிகளை மிகப் பெரிய மரங்களாக வளரும்படி விட்டுவைப்பதைப்பார்க்கிலும் நான்குவருஷத்துக்கொருதரம் மாற்றிப் புதிதாய்ப் பதிபோட்டுப் பயிர்செய்துகொள்வது மிகவும் நல்லது. ஏனெனில் புதிதாய்ப் பயிராக்கின இளஞ்செடிகளானால் இலைகள் அதிக செழிப்பாயும் ஸாரமுள்ளவையாயும் இருக்கும். மேலும் செடிகள் தாழமாய்த் தழைந்திருக்குமாகையால், செடிக்குச் சேதமில்லாமல் வெகு சுலபமாய் இலை சேகரித்துக்கொள்ளக்கூடும். மரமாய்ப்போனால் முடியாது. லாகோர் ஜாதிச் செடிகளுக்கும், மல்டிகாலிஸ் என்ற ஜாதிச் செடிக்கும் இந்த ஏற்பாடு மிகவும் அனுகூலமானது. அவை கணுக்குக் கணு கிளைவிட்டுத் தழைத்துக்கொண்டு வெகு நன்றாய் வளரும். அவற்றின் இலைகளும் பட்டுப்பூச்சிக்கு நல்ல உணவாகும்.

பிரதித்தொனியாவதென்ன?

பிரதித்தொனியென்பது இன்னதென இக்காலத்தில் நம்முள் அநேகர் கண்டும் கேட்டுமிருக்கலாம். ஆயின் அது இன்னதென்று தெரியாமல் புதிதாய்க் கேட்பவர்கள் அநேகர் அதைக் கேட்டவுடனே அச்சம்கொள்வதுமுண்டு. அப்படியே நான் என் சிறுபிராயத்தில் ஒரு மலைக்குகையின் வழியாய்ப் போம்போது அங்கே பிரதித்தொனி உண்டாகக் கேட்டு இதென்னவென்று திடுக்கிட்டு நின்றேன். அந்தக் குகைக்குள் யாரோ ஒருவன் புகுந்துகொண்டு நமக்குப் பயங்காட்டவேண்டுமென்றே நாம் சொல்வதையெல்லாம் திருப்பிச் சொல்லிக்கொண்டிருக்கிறானென்று தோன்றிற்று; ஆயின் அப்படி எண்ணுவது மிகப் பேதைமையேயொழிய வேறன்று. 3000 வருஷங்களுக்கு முன்னிருந்த பூர்வகாலத்துக் கிரேக்கர்கள் இவ்விதமான பேதைமையுடையவர்களாயே இருந்தனராம். அவர்கள் பிரதித்தொனியைப் பற்றி என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தார்களாம் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கேள்விப்பட்டதில்லையே! யாரோ ஒரு பெண் வாயோயாது அரற்றுகிற சுபாவமுடையவளாயிருந்ததாகவும், அதற்காக வெறுப்புற்று அவளை அரணியத்தில் துரத்திவிட்டதாகவும், நாளளவிலே அப்பெண் வற்றியுலர்ந்து அவளுடைய குரல் ஒன்றுதவிர மற்ற உடலெல்லாம் அழிந்துபோன

தாகவும், அதனாலேயே அவளுடைய வடிவம் ஒருபோதும் காணப் படாமல் கூச்சல்மாத்திரம் எப்போதும் கேட்டுக்கொண்டிருப்பதாக வும் அபிப்பிராயப்பட்டிருந்தார்கள்.

ஆயினும் அவர்களைப்போல இக்காலத்தவர்கள் அத்தனை மூடத் தனமுடையவர்களல்ல; இவர்கள் விவேகசாலிகள். பிரதித்தொனி யாவது இத்தன்மையதென இப்போது நமக்கெல்லாம் நன்றாய்த் தெரியுமல்லவா? பிரதித்தொனியாவது நாம் பேசுவதனால் உண்டா கும் ஒலியின் எதிரொலியேயொழிய வேறன்று. நாம் கண்ணாடி யில் பார்க்கும்போது நம்முடைய முகமே அக்கண்ணாடியில் பிரதி பலித்து அதின் பிரதிபிம்பம் அக்கண்ணாடிக்குள் வேறொரு முகம் போல நமது கண்ணுக்குத் தோன்றுவதுபோலவே, நம்முடைய கூச் சலும் நாம் பேசுமிடங்களிலுள்ள பாறைகளிலும் தோப்புகளிலும் பட்டு எதிரொலித்து வேறொருவர் பேசுவதுபோல நமக்குக் கேட் கின்றதேயொழிய மற்றொன்றுமல்ல.

முன்னோர்கள் ஒரு கதைசொல்லக் கேட்டிருக்கிறேன். ஒரு கால் ஒருபையன் விளையாட ஒரு தோப்புக்குப் போனானாம். போன பையன் சிறிதுநேரம் கழித்துத் திரும்பி அழுதுகொண்டு தாயண் டைவந்து, அம்மா அந்தத் தோட்டத்தில் யாரோ ஒரு துஷ்டப் பையல் கண்ணுக்குத் தெரியாமல் ஒளித்துக்கொண்டு, அடிக்கடி என்னைப் பரிகாசம்பண்ணுகிறான், திட்டுகிறான் என்று சொல்லிக் குறைகூறினானாம். அதன்மேல் அவள், பிரதித்தொனியைக் கேட்டு இவன் இப்படிச் சொல்லுகிறானெனத் தெரிந்துகொண்டு, குழந் தாய், அந்தக் கெட்டப்பேச்சுகளெல்லாம் நீ பேசின பேச்சுகளே யொழிய வேறல்ல; அவைகளே மறுபடி திரும்பி உன்னிடத்திற்கு வந்தனவென்று சொல்லி அவனைச் சமாதானப்படுத்தினாள்.

சிறுவர்களே, உலகில் இப்படிப் பிரதித்தொனிகள் உண்டாவது போலவே நாள்தோறும் பிரதிக்கிரியைகள் அநேகமுண்டாகின்றன. பிரதிக்கிரியையாவது, நாம் பேசுவதனாலாகிய ஒலியே திரும்பி எதி ரொலியாய் நமக்குக் கேட்பதுபோல, நாம் செய்கிற செய்கைக ளெல்லாம் திரும்பி பிரிதிக்கிரியையாய் நமக்கே வருவதாம். அது எப்படியென்பீர்களோ? ஒருகால் ஒரு பெண் என்னிடத்திற்கு வந்து தன்னிடத்தில் அபிமானமுடையவர்கள் எவருமில்லையென்றும், உற்றார் உறவினரெல்லாம் தன்னிடத்தில் பிரீதியில்லாதவர்களாய் இருக்கிறார்களென்றும், ஊராரெல்லாம் தன்னை விரோதித்துத் தான் எக்கேடுகெட்டாலும் கேட்பதில்லையென்றும் சொல்லி முறையிட் டாள். இது அவளுடைய கிரியைக்குப் பிரதிக்கிரியையாம். தன் னிடத்தில் எல்லாரும் நேசமுடையவர்களாயிருக்கவேண்டுமென் றால், தான் எல்லோரிடத்திலும் நேசமுள்ளவளாயிருக்கவேண்டும். அப்படியின்றி அவள் எல்லோரையும் அலக்ஷியம் செய்துவந்தத

ஞல் அவர்களும் அதற்குப் பதில் அவளை அலக்ஷியம் செய்தார்க ளேயொழிய வேறில்லை.

ஒருகால் ஒருவன் தன் மகளைப்பார்த்து, மகளே, எல்லோ ரும் உன்னிடத்தில் இவ்வளவு அன்பாயிருக்கிறார்களே இதற்குக் காரணம் என்னவென்று கேட்க, அம்மகள்: நான் எல்லோரிடத்தி லும் பிரீதியாயிருக்கிறபடியால் அவர்களும் என்னிடத்தில் பிரீதியா யிருக்கிறார்கள். முன்கை நீண்டால் முழங்கை நீள்கிறது. இதற் குக் கேட்பானேன் என்றாள். அதுதான் உண்மையான நீதி. அவ ளுக்குக் கிடைத்த ஆதரவு அவள் செய்த ஆதரவின் பிரதிக்கிரியை யேயொழிய வேறன்று.

வெட்டுக்கிளிகளை அழிக்கும் விதம்.

இந்தியாவிலே வெவ்வேறு பாகங்களில் வெட்டுக்கிளிகள் இன்ன சமயங்களிலே அல்லது இன்ன இடங்களிலே முட்டையிட்டு விருத் தியாகின்றனவென்பதைக்குறித்துச் சீக்கிரத்தில் சங்கதி தெரிந்து கொள்ளவும், அவை அவ்விடம் விட்டு வேறொரு இடத்துக்குக் கூட் டமாய்க் கிளம்பிப்போகிறவனாயில் அவைகளின் வரலாறு இன்ன தென்று நிச்சயித்துக்கொள்ளவும் இந்தியா கவரன்மெண்டார் ஆவலாயிருக்கிறார்கள். இந்த விஷயத்தைக்குறித்துத் தெரிவிக்கிற சங்கதியைக் கல்கத்தாவிலிருக்கிற ரிவினியூ அண்டு ஆக்ரிகல் சூர் ஆபீசுக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டியது.

ருஷியாவில் பிரசுரஞ்செய்த ராஜாங்க விளம்பரத்திலிருந்து எடுக் கப்பட்ட இதனடியில் குறித்திருக்கிற விஷயங்களால், இப்போது வேண்டியிருக்கிற சங்கதி இப்படிப்பட்டதென்று தெரிந்துகொள் ளலாம், அதாவது:—

"தானியத்தை அழிக்கும் வெட்டுக்கிளிகள் (Anisoplia Austriaca) இன்ன இடங்களில் வழக்கமாய் முட்டையிடுகின்றனவென்று தெரிந்துகொள்ளும்படி, கிரிமிசாஸ்திர பரீக்ஷையைக்குறித்து ருஷி யாவில் ஏற்பட்டிருக்கிற சபையின் காரியதரிசியாகிய மெஸ்தர் பார்ட்சியூஸ்கி என்பவர் ருஷியா ராஜ்யத்தின் தென்புறநாடுகளு க்கு அனுப்பப்பட்டதாகவும், அவர் பல்ட்டாவா என்னும் நாட் டில் அநேகந்தடவைகளில் ஆராய்ச்சிசெய்து அடியில்வருமாறு ஒரு முடிவுக்கு வந்ததாகவும் தெரியவருகிறது.

"தானியத்தை அழிக்கும் வெட்டுக்கிளியானது சாதாரண மாய்க் கோதுமைவயல்களில் முட்டையிடுகிறது. முட்டைகள் பொரித்தவுடனே அந்தப் பூச்சிகள் தானியத்தை அழிக்க ஆரம் பிக்கின்றன.

"கோதுமை வயலில் சதுர ஆர்சிவ்* ஒன்றுக்குச் சாதாரணமாய் வெட்டுக்கிளிகள் இருபதுமுதல் ஐம்பதுவரையிலிருக்கும். (rye) ரை என்னும் கோதுமையும் வாற்கோதுமையும் விளைகிற வயல்களில் மேற்படி வயல்களிலிருப்பதைப்பார்க்கிலும் லார்வா† மிகவும் குறைவாகவேயிருக்கிறது. அந்த வயல்களில் சதுர ஆர்சிவ் ஒன்றுக்கு இரண்டுமுதல் ஐந்துவரையில்தான் லார்வா இருக்கும். ஆனால் அந்த வயல்கள் கோதுமைவயல்களுக்கு அருகிலிருந்தால் கோதுமைவயல்களிலிருப்பதுபோலவே அவைகளிலும் லார்வா விசேஷமாயிருக்கும். ஆகஸ்டு, செப்டெம்பர், அக்டோபர் மாசங்களில் கோதுமை விதைத்திருக்கிற வயல்களிலே லார்வா ஏராளமாய்க் குடிகொண்டிருக்கின்றன. அவைகள் கிரிசலைட்ஸாக‡ மாறுவதற்குமுன்னமே அவைகளை அழிப்பது சாத்தியமான காரியமல்ல.

"வெட்டுக்கிளிகளை எவைகளிலிருந்து சொந்தக்காரர்கள் அடித்து ஓட்டிவிடுகிறார்களோ அந்த வயல்களின் நிலைமை மிகவும் வேறாகவேயிருக்கிறது. அப்படி ஓட்டிவிடப்பட்ட பூச்சிகள் அக்கம்பக்கத்திலுள்ள வயல்களுக்குக் கும்பல்கும்பலாய்ப் பறந்துபோகின்றன. சொந்தக்காரர்களால் இந்தப் பூச்சிகள் துரத்திவிடப்பெற்ற வயல்களில் சதுர ஆர்சிவ் ஒன்றுக்கு லார்வா மூன்றுமுதல் பதினாறுக்கு மேற்படாமலிருக்கிறது. ஆனால் சணல்-(buckwheat) பக்வீட்-(oat) ஓட்முதலியவை பயிராகிற வயல்களில் சாதாரணமாய் வெட்டுக்கிளிகள் புகுந்து நாசஞ்செய்யாமலிருந்தபோதிலும், அவைகள் மேற்படி கோதுமைவயல்களுக்கு அடுத்திருப்பதினாலே அவைகளில் அந்தப் பூச்சிகள் சேர்ந்து, ஆர்சிவ் ஒன்றுக்குப் பதினாறுமுதல் இருபத்தாறுவரையில் லார்வா குடிகொண்டிருக்கிறது.

"வெட்டுக்கிளிகளைக் கயிறுகளைக்கொண்டாவது யந்திரங்களைக் கொண்டாவது துரத்துவது மிகவும் கெடுதியானதென்று இதனால் தெரியவருகிறது. ஏனென்றால்—அவைகள் கோதுமைவயல்களில் முட்டையிடுகிறபட்சத்தில் அந்த முட்டைகள் கிரிசலைட்ஸ் உருவாகவிருக்கும்போது அவைகளை மார்ச்சு, ஏப்ரில், மே மாசங்களில் அழித்துப்போடலாம். அப்படியின்றி அந்தப் பூச்சிகளைத் துரத்திவிட்டால் அவைகள் கோதுமைவயல்களில் முட்டையி

---

*ஆர்சிவ் என்பது 27 அங்குலம்; இது ருஷியாவில் வழங்கும் ஒரு நீட்டலளவை.

† லார்வா (larva) என்பது-பூச்சியின் முட்டை புழு உருவமாக முதலில் மாறியிருப்பது.

‡ கிரிசலைட் (chrysalid) என்பது – முட்டை முதலில் புழுஉருவமாகிப் பிறகு அசைவற்று வேறொரு உருவமாக மாறியிருப்பது. கிரிசலைட் உருவத்தில் முழுவதும் தோற்போர்வையிருக்கும். இதிலிருந்துதான் பூச்சி சுவரூபத்தோடு ஜனிக்கிறது.

டாமல் பக்கத்திலுள்ள வயல்களில் என்னவிதைத்திருந்தபோதி லும் அவைகளில் போய்த் தங்குகின்றன.

"வெட்டுக்கிளிகளிருக்கும் இடத்தில் மெஸ்தர் பார்ட்சியூஸ்கி என்பவர் பரிட்சைசெய்துபார்த்ததில், ஏருழும்போது வெளியில் வந்த லார்வா சீக்கிரத்திலே மறுபடி பூமிக்குள் போய்விடுகின்றன வென்றும், அவைகளைப் பத்துநிமிஷம்வரையில் வெயிலிலே இருக்கும்படிச் செய்தால் அவைகள் தப்பாமல் அந்த வெப்பத்தி னால் செத்துப்போகின்றனவென்றும் தெரியவருகிறது. ஆதலால் மார்ச்சு, ஏப்ரில், மே மாசங்களில் லார்வா கிரிசலேட்ஸ் உருவ மாக மாறி முற்றிலும் அசைவற்றிருக்கும்போது, அவைகள் சூரிய வெப்பம்பட்டால் நிச்சயமாய் இறக்குமானதினாலே, அந்த மாசங் களில் வயல்களை உழுவது அதிக பிரயோசனமாயிருக்குமென்று அவர் நிதானிக்கிறார்.

"முட்டைகளை அழித்து வெட்டுக்கிளிகளைப் பரவவொட்டா மல் செய்வது சாத்தியமல்லவென்று மெஸ்தர் பார்ட்சியூஸ்கி என் பவர் அபிப்பிராயப்படுகிறார். ஏனென்றால் முட்டைகள் லார்வா உருவமாக மாறுவதற்குமுன்னே அவைகள் பூமியிலிருப்பது கதிர் வாங்கியிருக்கிற காலத்திலேதான்."

சிறுவர்க்கான கதை.

அற்புதமான ஆறு ஊழியக்காரர்கள் (தொடர்ச்சி.).

தம் இளவரசனண்டையில் படுத்திருந்த மாயராணியின் மகள் திடீரென்று அர்த்தராத்திரியில் காணாமல்போகவே அவளைத் தேடிக் கொண்டு வரும்படி நெடுங்காலன் நெடுங்கண்ணனைத் தூக்கிக் கொண்டு குறித்தவிடம்போய்ச் சேர்ந்தானென்று சென்ற சஞ்சிகை யிற் சொன்னோமே. அவ்விடம் போனவுடனே நெடுங்கண்ணன் கட்டிக்கொண்டிருந்த தன் கண்களை அவிழ்த்துவிட்டு அந்தக் குகை யை உற்றுப்பார்த்தான். அந்தக்ஷணமே அக்குகையை மூடிக் கொண்டிருந்த பாறைகளெல்லாம் பிளந்துபோய்ப் பாதாளத்திலி ருந்த குகை வெளியாகி எல்லோரும் எளிதாய்ப்போவதற்கேற்ற விடமாயிற்று. அதற்குள்ளிருந்த பெண்ணரசி பளபளவென்று தோன்றினாள். அவளைக் கண்டவுடனே நெடுங்கையன் தன் நீண்ட கைகளால் அவ்வழகியைத் தூக்கியெடுத்துக்கொண்டுபோய்ச் சீக்கி ரமே யஜமானனிடம் சேர்த்தான். அப்பொழுது சரியாய்ப் பதினைந்து நாழிகையாகவில்லை. அதுகண்டு அந்தத் தோழர்களெல்லாரும் ஒன்றாய்ச் சேர்ந்து தங்கள் காரியம் கைகூடிற்றென்று களிப்புற்று வினோதமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அவர்கள் அப்படியிருக்கும் தருணத்தில் சரியாய்ப் பதினைந்து நாழிகையாயிற்று. அப்போது அந்தக் கொடிய மாயக்கிழவி, கடைசியாய் இந்த ராஜகுமாரனை வென்றுவிட்டோம் என்று அகமகிழ்ந்து புன்னகை நகைத்துக்கொண்டு அவ்வீரர்களிருக்கும் இடத்திற்கு வந்தாள். தன்னுடைய மகள் முன்னூறுகாத தூரத்துக்கப்பால் ஒரு குகைக்குள் பத்திரமாயிருக்கிறாளென்று எண்ணி அவள் ஆநந்தித்துக்கொண்டிருக்க, அம்மகள் இங்கே ராஜகுமாரனுடைய மடியில் உட்காந்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டு, ஓ! இவர்களை வெல்ல எவராலும் ஆகாது. எனக்குத் தெரிந்த மாயையைப்பார்க்கிலும் பதின்மடங்கு அதிகமான மாயைகற்றவர்கள் இவர்கள் என்று சொல்லி அவர்களுடைய திறமைக்காக மிகவும் ஆச்சரியமடைந்தாள். இனி அந்த மாயக்கிழவி என்னசெய்வாள்! மறுபடியும் சாக்குச்சொல்லி அவர்களை வஞ்சிக்க மனந்துணியாமல் முன் தான் வாக்குத்தத்தம் செய்தபடியே மகளை அவனுக்குக் கொடுத்துவிடவேண்டியதாயிற்று. ஆயினும் யாரோ ஒரு வழிப்போக்கனுக்குத் தன் அருமைமகளைக் கொடுத்துவிட அவள் மனம் பொறுக்கவில்லை; அதனால் உடனே மகளண்டை போய், மகளே நான் சொன்னவாக்குத் தவறக்கூடாமல் உன்னை இம்மனிதனுக்குக் கொடுத்துவிட்டேன். ஒரு அற்பமனிதனைக் கலியாணம்செய்துகொள்வது உனக்கே வெட்கமல்லவா? இனி உன் இஷ்டம் எப்படியோ அப்படித்தான் நடக்கவேண்டும். உன் கையிலானதைப் பார்த்துக்கொள் என்றாள்.

அதைக்கேட்டு அம்மகள் மிகக் கருவங்கொண்டு நாம் இவனை எப்படியாவது வெல்லவேண்டுமென்று தீர்மானித்து, மறுநாள் நடுக்காட்டிலே அளவற்ற விறகுகள் கொண்டுவந்து பெரும் குப்பலாய்ச் சேர்க்கத் திட்டம்செய்து, பிறகு தனக்கு வரனாக வந்திருந்த ராஜகுமாரனைக் கண்டு, நண்பனே! நீ என் தாய்சொன்ன மூன்று வேலைகளையும் விரைவாய்ச் செய்துமுடித்தாய் மெய்தான்; ஆயினும் எனக்குப் பிரதிஞ்ஞை ஒன்று உண்டு. பயங்கரமாய்ப் பற்றியெரிகின்ற பெருந்தீயில் உட்காந்து அந்த வெப்பத்தைத் தாங்க வல்லனாய் ஒருவன் கிடைக்கிறவரையில் எவரையும் விவாகம்செய்துகொள்வதில்லையென நான் விரதம்கொண்டிருக்கிறேன். ஆதலால் இப்போது நான் உன்னைக் கலியாணம்செய்துகொள்வதற்கில்லையென்றாள். ராஜகுமாரனுக்காக மற்றெவரும் உயிரைக்கொடுக்கத் துணியார்களாகையால், தன்னிடத்திலுள்ள ஆசைப்பெருக்கினால் தன் விரதத்தை நிறைவேற்றும்பொருட்டு அவனே நெருப்பில் குதித்து உயிரை இழந்துபோவானென்பது அவள் கொண்ட கருத்து.

அதைக்கேட்டு ராஜகுமாரன் இதற்கு என்னசெய்வதென்று தன் தோழர்களோடு ஆலோசித்தபோது அவர்கள், இதுவரையில் நாங்களெல்லாரும் அவரவர்க்கு இயன்றவளவு உதவிசெய்துவந்தோம். பெருங்குளிர்க்காரன் ஒரு வேலையும் செய்யாமல் சும்மா

இருக்கிறன்; இதுதான் அவற்குத் தருணம். அவனைப் போய் எரிகிற தீயில் உட்காரச்சொல்லலாமென்றார்கள். அவ்வண்ணமே அச்செய்தியை இளவரசிக்குத் தெரிவித்துக் காட்டில் அடுக்கிய கட்டையில் தீக்கொளுத்தச்செய்து அதின் மத்தியில் பெருங்குளிர்க்காரனை உட்காரவைத்தார்கள். அந்தத் தீ மூன்றுநாள்வரையில் ஓயாமல் ஆகாயமளாவி எரிந்துகொண்டிருந்தது. பிறகு தீ கொஞ்சம் தணிந்தவுடனே அவன் உடல் நடுக்க நடுக்க அங்கிருந்து கீழேகுதித்தோடிவந்து, நான் இதுவரையில் ஒருநாளும் இப்படிப்பட்ட குளிரில் வருத்தப்பட்டதில்லை; இன்னும் சிறிதுநேரம் எரிந்துகொண்டிருக்குமானல் ஜன்னிகண்டு மாண்டுபோயிருப்பேன் என்றான்.

அதைக்கேட்டு இப்படியும் உலகில் ஒரு மனிதன் உண்டோவென்று அங்கிருந்தவர்களெல்லாரும் ஆச்சரியமடைந்தார்கள். இனிமேலும் அவர்கள் என்னசாக்குச் சொல்லலாம். ஒரு வழியும் தோன்றாமல் கடைசியாய் அந்தப் பெண்ணழகி முகமறியாத அவ்விளவரசனைக் கலியாணம் செய்துகொள்ளும்படி நேரிட்டது. அப்போதும் தன் மகள் அவனைக் கலியாணம் செய்துகொள்வது மாயக்கிழவிக்குப் பொறுக்கவில்லை. ஆனதுபற்றி அவள் தன் போர்வீரர்களை அழைத்து, கலியாணத்துக்காகப் பெண்ணும் பிள்ளையுமாய் ஊர்கோலம் வரும்போது நீங்கள் போய் எந்த ஸாகஸமாவது செய்து தந்திரமாய்ப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு வந்துவிடுங்களென்றாள். இந்த ரகசியம் செய்திகேட்போன் காதுக்குக் கேளாமற்போகவில்லை. இந்தச் சூது தெரிந்தவுடனே அவன் தன் தோழனான பெருவயிறு படைத்தோனைக் கண்டு இதற்கு நாம் செய்யவேண்டுவது என்னவென்று கேட்க, இவ்விஷயத்தைப்பற்றி நீங்கள் ஒருவரும் கவலைப்படவேண்டாம். இந்த ஆபத்து நேரவொட்டாமல் நான் ஒருவனே காத்துக்கொள்கிறேன் என்றுசொல்லி அவர்கள்மேலேயே கண்ணாயிருந்தான். இளவரசனும் இளவரசியும் கலியாணத்துக்காக ஊர்கோலமாய்ச் சிறிதுதூரம் போகையில் பின்னால் காலாட்படையொன்று அவர்களைத் தொடர்ந்துவந்தது. அதுகண்டு பெறுவயிறு படைத்தோன் முன் தான் குடித்திருந்த கடல்நீரில் இரண்டொரு துளிகளை அவர்களின்மேல் உமிழ்ந்தான். அது ஒரு பெரிய ஆறாய்ப் பெருகி அவர்களை அடித்துக்கொண்டு போய்விட்டது. அதுதெரிந்து ராணியானவள் மிகவும் துயரமடைந்து குதிரைவீரர்களை ஏவினாள். அந்தப் பட்டாளம் வருவதின் ஓசையை நெடுஞ்செவியுடையோன் வெகுதூரத்திலிருந்தே கேட்டு அதைத் தன் தோழர்களுக்குத் தெரிவிக்க அவர்களுள் ஒருவனான தீப்பார்வையுடையோன் தன் கண்ணை அவிழ்த்து அவர்களை விழித்துப்பார்த்தான். அந்தப் பட்டாளம் அத்தனையும் சின்னபின்னமாய்ப் போய்விட்டது. அதற்குப்பிறகு எவ்விதமான இடையூறும் உண்டாகவில்லை; வெகு வைபவமாய் அவர்களுக்கு ஊர்கோலம் நடந்து விவாகமும் நடந்

தப்பட்டது. தாம் கோரினபடியே தம் இளவரசனுக்கு உலகத்துக் கோர் அற்புதமான அவ்வழகியைக் கலியாணம்செய்வித்துப் பிறகு அந்த வீரர்கள் ஆறுபேரும் அவ்வரசனைக் கண்டு, இப்பொழுது உன் மனோரதம் பூர்த்தியாயிற்றல்லவா? இனி எங்களுடைய உதவி தேவையில்லையே. இனிமேல் எப்பொழுது எங்களுடைய உதவி வேண்டுமானாலும் எங்களை மனதினால் நினைத்தவுடனே சித்தமாய் வந்து சேருகிறோமென்று சொல்லிப் போய்விட்டார்கள்.

இப்படியிருக்க ஒருநாள் மாலைவேளையில் இளவரசன் தன் பெண் சாதியுடன் அப்பட்டணத்துக்கு வெளியேபோய்ச் சவாரிசெய்து வரும்போது அங்கே ஒரு குப்பத்தில் குறவன் ஒருவன் பன்றிமேய் த்திருக்கக் கண்டு இளவரசன் பெண்சாதியைப் பார்த்து, கண்ணே! நீ என்னை யாரென்று நினைத்திருக்கிறாய்? நான் ராஜகுமாரனன்று; பன்றிமேய்க்கிற குறவன். அதோ பன்றிமேய்த்துக்கொண்டிருக்கி றாரே அவர்தான் என் தகப்பன்; ஆகையால் இனி நாம் பட்டணம் போகக்கூடாது. இங்கேயேதான் என் பெற்றோர்களுக்கு ஊழியம் செய்துகொண்டிருக்கவேண்டும். இவர்கள் இப்படி வருந்திக்கொண் டிருக்க நாம் பட்டணத்தில் சவுக்கியமாயிருப்பது யோக்கியமல்ல என்று சொல்லி, தான் வண்டியைவிட்டிறங்கி அந்தப் பெண்ணையும் இறங்கச்செய்து அந்தக் குறவனுடைய குடிசைபோய்ச் சேர்ந்தான். பின்பு அவன் அந்தக் குறவர்களுக்குத் தன்னுடைய கருத்தை ரகசிய மாய்த் தெரிவித்து, இராத்திரி தூங்கும்போது தன் பெண்சாதி அணி ந்திருக்கும் அரசர்க்குரிய ஆடையாபரணங்களை அப்புறப்படுத்தும் படியாகவும் அவர்களுக்குத் திட்டம்செய்தான்; அவர்களும் அவ் வண்ணமே செய்தார்கள். மறுநாள் காலையிலெழுந்து ராஜகுமா ரத்தி உடுக்க உடையில்லாமல் தவித்தபோது குறத்தி தான் கட்டிக் கிழிந்த கந்தைத்துணியொன்றை அவளுக்குத் தந்தாள். வேறுவிதி யில்லாமல் அவள் அந்தக் கந்தைத்துணியைத் தரித்துக்கொண்டு, தன் கணவன் வாஸ்தவமாய்க் குறவனேயென்று நினைத்து, கடைசி யில் நமது தலைவிதி இப்படியா முடிந்ததென்று விதியைவெறுத்துக் கொண்டு நாள்தோறும் பகலில் பூங்காவனத்திலே தோழிகளோடு கூட விலாசமாய் விளையாடினதுபோய்க் குறவர்களோடுகூட வெயி லிலே திரிந்து பன்றிமேய்ப்பதும், இராக்காலங்களில் அற்புதமான இறகுமெத்தையில் படுத்துத் தூங்கினதுபோய்ப் பருக்காங்கற்றரை யில் தழையைப் பரப்பிக்கொண்டு படுப்பதுமாயிருந்தாள். அப் போது அவள், நாம் கொண்டிருந்த கர்வத்தை அடக்குவதற்காகவே சுவாமி இப்படிப்பட்ட கொடியதண்டனை நமக்கு விதித்தார் என்று நினைத்து மிகவும் மனஞ்சோர்ந்திருந்தாள். இப்படியே ஒருவாரம் சென்றது. அதற்குள்ளேயே அம்மகள் மிகவும் மெலிந்துபோயி னாள். அவள் காலெல்லாம் எடுத்தடிவைக்க உபயோகமில்லாமல் புண்பட்டுப்போயிற்று. இப்படி அவள் வருந்திக்கொண்டிருக்கை

யில் யாரோ இரண்டுபேர் அவளிடம்வந்து, நீ யார், உன் கணவன் எங்கேயென்று கேட்டார்கள். அதற்கு அவள், நான் ஒரு குறவனுடைய பெண்சாதி. என் கணவன் இப்பொழுதுதான் கிளாமணி பாலமணி விற்றுக்கொண்டுவரப் பட்டணத்திற்குப் போயினரென்றாள். அதுகேட்டு அவர்கள் அவளுடைய மனவருத்தத்தைப் பார்த்து ஐயோவென்று அவளிடத்தில் மிகவும் பரிதாபமடைந்து, உன்னை உன் புருஷன் அழைத்துவரச் சொன்னார் வாவென்று சொல்லி, அவளைப் பட்டணத்தில் அரசன் அரண்மனைக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அங்கே சிங்காதனத்தில் அவளுடைய புருஷனே மகாராஜாவாயுட்காந்திருந்தானாயினும், அவன் இன்னானென்று தெரியாமல் நாற்புறமும் விழித்துப் பார்த்துக்கொண்டு அவள் திகைத்துநின்றாள். அப்போது சிங்காதனத்தில் உட்காந்திருந்த இளவரசன் அம்மகளைப்பார்த்து, பெண்ணே! நான் யார் தெரிகிறதா? உன்னைத் தொட்டுத் தாலிகட்டின தீரபுருஷன்; நான் கோமகனேயொழியக் குறவனன்று. நான் உன்னைப் பெறுவதற்கு எவ்வளவு பாடுபட்டேன்! அப்படியே நீயும் வருந்தி என்னைப் பெற்றாலன்றி உனக்கு என்னிடத்தில் பிரீதியுண்டாகாதென்பதற்காகவே உன்னை இவ்வளவுதூரம் அலைக்கழித்தேன்; பொறுத்துக் கொள்ளவேண்டும். இப்போது உன் அகங்காரமெல்லாம் அடங்கிற்றல்லவா? இனி நீ ஒருபோதும் இப்படி அகங்காரப்படாதே. உன்னை வெல்லத்தக்கவர்களும் உலகிலிருப்பார்களென்று எண்ணி அடக்கமாயிரு என்று புத்திசொல்லிப் பிறகு அப்பெண்மணியை அழைத்துப் பக்கத்தில் உட்காரவைத்து அவளோடுகூடப் பட்டாபிஷேகம் செய்துகொண்டு வெகுநாள் சுகமாயிருந்தான்.

சமாசாரம்.

திருவநந்தபுரத்தில் கூடிய ஜனப்பிரதிநிதி சபை.—திருவநந்தபுரம் ராஜ்யத்தில் நில அளவை முதலியவைகளைப்பற்றிப் புதிய ஏற்பாடு செய்ய நினைத்து அதைக்குறித்துக் குடிகளுடன் ஆலோசிக்கும்பொருட்டு அந்நாட்டுக்குடிகளுடைய பிரதிநிதிகளை ஒவ்வொரு தாலூக்காவிலிருந்தும் வரவழைத்து அந்த ராஜ்யத்து திவான் ஒரு சபைகூட்டினார். அவ்வாறு கூடிய சபையில் திவான் தற்காலத்தில் நடந்துவருகிற ஏற்பாட்டிலுள்ள கெடுதிகளையும், புதிதாய் யோசித்திருக்கிற ஏற்பாட்டிலுள்ள நன்மைகளையும் அதுவிஷயத்தில் ராஜாங்கத்தார் செய்யக்கருதிய உபகாரங்களையும் தெளிவாய் எடுத்துக்காட்டி ஒரு உபந்நியாஸம் செய்தார். அங்கு வந்திருந்த குடிகளெல்லாம் அவ்விஷயத்தைப்பற்றித் தங்களோடு யோசித்ததற்காக மிகவும் பெருமையடைந்து, அவருடைய உபந்நியாஸத்தைக் கேட்டு ராஜாங்கத்தார் செய்யக்கருதியது தமக்கு அநுகூலமாகவே இருக்கிறதென்று மிகவும் மகிழ்ச்சியடைந்து தம் தம் ஊர்போய்ச் சேர்ந்தார்கள்.

C. K. S. Press, Vepery, Madras, 1883.

66-A

H.R.H. THE PRINCE OF WALES.

மாட்சிமைதங்கிய பிரின்ஸ் அவ் உவேல்ஸ் எனும் இளவரசர்.